26

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—உகூ] பிரமோதூதஹூ பங்குனிமீ [பகுதி-ரு.
Vol. XXIX. *March-April-1931.* No. 5.

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| சிறுபொழுதாராய்ச்சி:— | ஸ்ரீமத். பண்டித. சி. வீரபாகுப்பிள்ளை. | கருகூ |
| ஓர் ஐயம்:— | ,, ஆ. சுப்பிரமணியபிள்ளை. | கஅகூ |
| கவிலவனுர் சரித்திரம்:- | ,, N. R. கிருஷ்ணமூர்த்திஐயர் M.A. | கஙக |
| அரும்பொருள் விளக்க நிகண்டின் உள்ளுறை முதலியன:— | ,, S. வையாபுரிப்பிள்ளை B.A., B L., | |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு:— | | |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—3.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1931.

...thu Raja M. Dinakara Bahadur Avl., and
...y Thiru. Narayana Iyengar, at the
...er Press, No. 54, New Jail Road, Madura.

2.1502

## ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

## விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் சமீபத்தில் அச்சிட்டு விற்பனைக்குச் சித்தம் செய்துவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விலை முதலிய விவரக்குறிப்பு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | வைத்தியசாரசங்கிரகம் (இரண்டாம்பதிப்பு). | ரூ. | 5—0—0 |
| 2. | மாறனலங்காரம் | ,, | 4—8—0 |
| 3. | வில்லிபாரதம் | ,, | 4—0—0 |
| 4. | அகப்பொருள்விளக்கம் | ,, | 1—4—0 |
| 5. | திருவாரூருலா. | ,, | 0—8—0 |
| 6. | திணைமாலை நூற்றைம்பது. | ,, | 0—8—0 |
| 7. | சேதுநாடும் தமிழும். | ,, | 0—6—0 |
| 8. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி. | ,, | 1—4—0 |
| 9. | கூடற்புராணம் (முதற்பதிப்பு) | | 0-10-0 |
| 10. | மதுரைத்திருப்பணிமாலை (மூன்றாம்பதிப்பு) | | 0—8—0 |
| 11. | பன்னூற்றிரட்டு (நான்காம்பதிப்பு) | | 3—0—0 |
| 12. | அரும்பொருள்விளக்க நிகண்டு (முதற்பதிப்பு) | | 1—4—0 |

தபாற்கூலி வேறு. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி—உ௯] பிரமோதூத ஹு பங்குனிமீ [பகுதி-ரு.

Vol. XXIX. *March-April-1931.* No. 5.


## சிறுபொழுதாராய்ச்சி.

தமிழ்மக்களுக்குத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை இன்னது என்று விஸ்தரித்தால்தான் தெரியும் என்ற காலம் மலையேறிவிட்டது. ஆகையால் அது வேண்டாம். அதிலே சிறுபொழுதைப்பற்றிய பிரஸ்தாபம் வரும்பொழுது அதற்கு உரை எழுதிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மாலை, இடையாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு எனச் சிறுபொழுது ஆறு என்கிறார்கள்.

வைத்தியநாததேசிகரும் சிறுபொழுது ஆறு என்ற கருத்துடையவரே. இலக்கணவிளக்கத்தில் அப்பகுதியைப் படித்துப்பார்க்கும்போது அவர் நச்சினார்க்கினியருக்கு உத்தமமாணாக்கரென்றுசொல்லும்படியிருக்கிறது.

இனிக் களவியலுரைகண்ட ஆசிரியர் நக்கீரனார் அக்களவியலுரையிலே, "குறிஞ்சிக்குப்...........பொழுது கூதிரும், யாமமும், பின்பனியும்" என்றும், நெய்தற்கு...............பொழுது எற்பாடு என்றும், "பாலைக்கு...............நண்பகலும், வேனிலும், பின்பனியும் உரித்து" என்றும், "முல்லைக்கு...........பொழுது காரும், மாலையும்" என்றும், "மருதத்திற்கு...............பொழுது வைகறை யாமம்" என்றும் சிறுபொழுது ஐந்தே கொண்டு தொல்காப்பியச் சூத்திரங்களையும் பிரமாணமாக எடுத்துக்காட்டுவார்.

திருப்புளிங்குடி நாற்கவிராசநம்பி தமது அகப்பொருள் நூலிலே,

"மாலை யாமம் வைகறை யெற்பாடு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்"

எனச் சூத்திரஞ்செய்து சிறுபொழுதைந்து என்று முடிவுகட்டினார். ஆசிரியர் தொல்காப்பியனார் சிறுபொழுதைக் கூறினும் இத்தனையென்று எண்ணிக் கூறாததே உரையாசிரியர் ஆறு என்னக் காரணம் என்று கருதி அமைத்ததுபோலிருக்கிறது அவர் "கைவகைச் சிறுபொழு தைவகைத்தாகும்" என்பது.

நிற்க, கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்திலே பாலைநிலத்தை வருணிக்கும்போது,

"காலை வெம்பகல் கதிரவன் குடதிசை சாக்கும்
மாலை யாமம்வை கறையெலாம் செந்தழல் வடிவாய்
வேலை யும்பரு கியவெழும் வெம்மை"

என்கிறார்கள். சிவப்பிரகாசசுவாமிகளும் சிறுபொழுது ஐந்து என்ற கொள்கையுடையவர்களே. அவர்கள்,

"சிறுபொழு தைந்தினும் திரிவி லாதபே
ரறுபொழு தினுமித ழவிழ்ந்து தேன்சொரி
நறுமலர் நிறையுமந் நந்த னத்தினைப்
பெறின்மக பதிவளம் பெறவு வந்திடார்"

என்கிறார்கள்.

இவ்விதம் இளம்பூரணர், நச்சினார்க்கினியராகிய உரையாசிரியர்கள் ஒருவிதமும், களவியலுரையாசிரியர் இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் ஒருவிதமும் மாறுபடவே இவர்கள் எல்லாருக்கும் பிரமாணமாகவுள்ள தொல்காப்பியச்சூத்திரத்துக்கு உண்மைப்பொருளை நிச்சயிக்க வேண்டியதாயிற்று. ஆகவே, ஸ்ரீ சிவஞானசுவாமிகள் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிலே சிறுபொழுதைத் தொல்காப்பியச்சூத்திரப்படி ஆராய்ந்து அவர்கள் அது "ஆறு அல்ல; ஐந்தே" என்று அறுதியிட்டிருக்கிறார்கள். அவர்கள் கூறுவன இவை:—



சிறுபொழுதுபற்றி (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் பாலை என) முறைகோடலே சாலுமென்க.

ஆண்டு எற்பாடென்றது நாள்வெயிற்காலையேயாம். 'படுதல்' உண்டாதல் என்னும்பொருட்டு.

எற்பாடென்றது ஞாயிற்றினுதயம் என்றவாறாயிற்று. தலைவன் பிரிந்துழித் தனித்திருந்த தலைவி இராக்காலம்முழுதும் கொன்னே கழிந்தமைபற்றி இரங்குதற்குரியகாலம் அதுவாமென்பார் "எற்பாடு, நெய்தலாதல் மெய்பெறத் தோன்று" மென்றார்.

இனி, இவ்வாறன்றி வைகுறுவிடியலென்னும் வினைத்தொகையை வைகுறுவும் விடியலும் என உம்மைத் தொகையாக்கி வைகறையை வைகுறுவெனவும், நாள்வெயிற்காலையை விடியலெனவுங் கொண்டு இவ்விரண்டும் மருதத்திணைக்குரியவென்றும், பின்பகலை எற்பாடெனக் கொண்டு அது நெய்தற்குரியதென்றும் இங்ஙனம் சிறுபொழுது அறுவகைப்படும் என்றுரைப்பாருமுளர்.

1. "காலையும் பகலும் கையறு மாலையு
மூர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்"

என்னும் குறுந்தொகைப்பாட்டினுட் சிறுபொழுதைந்தே கொண்டமையானும்,

2. பகலெனவே பின்பகலு மடங்குமெனின் அதுபற்றி முன்பகலு மடங்குமென்றொழியாது காலையை வேறுகூறினமையின் அது கருத்தன்றாகலானும்,

3. ஆண்டும் வைகறையினையே விடியலென்றமையின் காலையை விடியலென்றல் பொருந்தாமையானும்,

இதனானே "விடியல்வெங்கதிர்காயும்" என்புழி விடியற்பின்னர்த் தாகிய வெங்கதிர் என்பதே பொருளாமாகலானும்,

விடியல் 'இருள்புலர்தல்' என்னும் பொருட்டாகலின் விடியல், *புலரி, வைகறை என்பன ஒருபொருட்கிளவியாகலானும்,

*பரிமேலழகரும் 'புலரிக்கு' வைகறை யென்றே பொருள்கூறினார் (பரி. 6. 58. உரை.)

4. "ஊடுதல் காமத்துக் கின்ப மதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்" என்பவாகலின் ஊடலிறுத்திக்கட் கூட லொருதலையென்பது பெறப்படுதலின், கற்புக்காலத்து நாள்வெயிற் காலையிற் புணர்தல் முறை யன்மையின் அக்காலத்தி னூடல் செல்லாமையானும்,

5. அடிசில் கைதொட்டபின்னர்ப் பயமின்றிக்கழியும் பின்பகல் புராணக்கேள்வி முதலியவற்றானுதல் விளையாட்டுமுதலியவற்றானுதல் பொழுதுபோக்கப்படுவதல்லது விதிக்கப்படும் கருமம் ஒன்றற்கும் உரித் தன்மையின் அதனை ஒன்றாகவைத்தெண்ணிச் சிறுபொழுது அறு வகைத்தென்றல் பொருந்தாமையானும்,

6. ஆசிரியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என முறைசெய்தற்கேது மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் எனச் சிறுபொழுதின் கிடக்கைமுறையேயன்றி வேறின்மையானும்,

7. ஏனைத்திணைகட்குச் சிறுபொழுது ஓரோவொன்றேயாகலின் மருதமாத்திரைக் கிரண்டுகோடல் பொருந்தாமையானும் அஃ துரையன் றென மறுக்க.

8. பெரும்பொழுதாறென்றார்க்குச் சிறுபொழுதுமாறென்றலே பொருத்தமுடைத்தெனின் அங்ஙனங் கூறுவார்க்கு மருத நெய்தல்கட் குப் பெரும்பொழுதெல்லாம் உரியவென்றார்க்குச் சிறுபொழுதுமெல்லாம் உரியவென்றல் பொருத்தமுடைத்தெனவேண்டுதலின் அது கடாவன் றென விடுக்க.

இவ்விதம் சுவாமியவர்கள் இளம்பூரணரையும் நச்சினார்க்கினியரை யும் மறுத்துச் சிறுபொழுது ஐந்து என்று கூறிவிடவே 'சிறுபொழுது ஆறு' என்றது பழங்கதையாகிவிட்டது. இன்று அதைப் புதுக்க எண்ணி யாழ்ப்பாணம் சி. கணேசையரவர்கள் செந்தமிழ்த் தொகுதி 26. பகுதி 2இலே சிறுபொழுது என்று தலைப்பிட்டுச் சுவாமிகளை மறுத்து உரையாசிரியர்களைத் தழுவிச் சில எழுதியிருக்கிறார்கள். ஆகையால், நாம் அவர்கள் எழுதிய மறுப்புக்களைத் திரும்பவும் இங் கெடுத்தெழுதி அவற்றை ஆராய்வோம்.

"தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம்பூரணரும், நச்சினார்க்கினிய ரும் "வைகறை விடியல் மருதம்" என்னும் சூத்திரத்திற்கு வைகறையும் விடி லும் எனப்பொருள்கொண்டு சிறுபொழுது ஆறு என்கிறார்கள்."*

---

*இதுவும், பின்னும் இவ்வாறே சிறிய எழுத்திற் பதிக்கப்பட்டுள்ள வாக்கியத்தொடர்களும் ஸ்ரீமத். கணேசையரவர்கள் கூற்று.



நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் "வைகறை விடியல் மருதம்" அல்ல. 'வைகுறுவிடியல் மருதம்' என்பதே பாடம். வைகுறு விடியல் என்றிருப்பதினாலேயே நச்சினார்க்கினியர் 'வைகுறு' வென்பதற்கு 'வை கறையாமம்' என்று பொருள்கூறிப் பின், "செவியறிவுறுதலைச் 'செவி யறிவுறூஉ' என்றாற்போல வைகுறுதலை வைகுறு என்றார்" என்கிறார்.

இனி இளம்பூரணப்பதிப்பு இரண்டிலும் நச்சினார்க்கினியத்தில் ஒருசூத்திரமாகவிருப்பது இரண்டுசூத்திரமாகவிருப்பதோடு பாடமும் 'வைகறைவிடியல்' என்றிருக்கிறது. காலத்தால் இளம்பூரணர் முன் னுள்ளவர்; நச்சினார்க்கினியர் பின்னுள்ளவர். இளம்பூரணத்திற் பாடம் 'வைகறைவிடியல்' என்றிருந்தால் 'வைகுறுவிடியலை' உம்மைத்தொகை யாகக்கொண்டு உரையெழுதும் நச்சினார்க்கினியர் வியாக்யானம்பண்ணுமி லே தமக்குச் சாதகமாகவிருக்கும் 'வைகறைவிடியல்' என்னும் பாடத் தை எடுத்துக்கொள்ளாமலிருப்பாரா? வைகுறுவை வைகறையாக்கும் சங்கடம் இல்லாமலிருக்குமே! ஆகவே இளம்பூரணப்பாடம் நச்சினார்க் கினியர்காலம்வரையும் வைகுறுவிடிய லென்றுதா னிருந்திருக்கிறது. அது பின் ஏடெழுதுவோரால் திருத்தப்பட்டிருக்கவேண்டும். வைகுறு விடியலுக்கு "வைகுறுவிடியலியம்பியகுரலே" (புறநா. 233) என்றும், "வைகுறுவிடியல் போகிய வெருமை" (அகநா. 100) என்றும் பிரயோக மிருக்கின்றன.

"இரவு முதல்யாமம், இடையாமம், கடையாமம் என வகுக்கப்படும். 'இடையிருள்யாமத் திட்டுநீங்கியது' எனவும்........'கடைக்கங்குல்' எனவும் வருவனவற்று லறிக. (முதல்யாமம் வந்தவழிக் கண்டுகொள்க.)"

உலகவழக்கிலாகட்டும் செய்யுள்வழக்கிலாகட்டும் இரவு முதல் யாமம், இரண்டாம்யாமம், நடுயாமம், நான்காம்யாமம் என நான்கு பிரி வாகவே பிரிக்கப்படுகிறது. மாங்குடிமருதனார் தமது மதுரைக்காஞ்சி யிலே இரவை நான்குகூறாய்ப்பகுத்து வருணித்திருப்பதும் அதன் உரையிலே நச்சினார்க்கினியர் "இரண்டாஞ்சாமத்திற்கும் நான்காஞ் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்களுலவும் செயலற்றகங்குல்" என்பதும் நாம் கூறியதை உறுதிப்படுத்திவிடும்.

"பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் றிரியுங் கருவூரா—யாமங்கள்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்று"

என்னும் கடிகையார்கவிதையும்,

"படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே
கிடைத்தபிற் சாம மிருதிங்க ளெட்டிற் கிடைக்குமென்னு
மிடைப்பட்ட சாமமோர் மூன்றினிற் றிங்களோர் மூன்றென்பவாற்
கடைப்பட்ட சாமமு நாள்பத்து ளேபலங் கைபெறுமே."

என்னும் கனூலும் அதனைப் பசுமரத்தாணியாக்கிவிடுகின்றன.

இப்படி இரவு நான்குபிரிவுடையதாகிவிட்டது. இனி அது மூன்றுபிரிவுள்ளதென்று காட்டவந்த ஐயரவர்கள் இரண்டுபிரிவுக்கு மேற்கோள்காட்டி ஒன்றுக்குக்காட்டவியலாது நெகிழவிட்டது சிந்திக்கத்தக்கதே. இடையாமங் கடையாமங்களுக்கு அவர்கள் காட்டும் மேற்கோளும் அவர்களுக்குச் சாதகமாயில்லை. "இடையிருள்யாமத் திட்டு நீங்கியது" (சிலப். 14-55) என்பதற்கு அடியார்க்குநல்லார் "அரையிருள் யாமத்தே அவனை உறக்கிடை நீத்து நீங்கியது" என்று பொருள்கூறுகின்றார். அரையிருள்யாமம் அல்லது நடுயாமம் என்பது இரண்டுக்கும் மூன்றுக்கும் நடுவிலுள்ள மூன்றும் யாமம். நச்சினார்க்கினியர்கருத்தும் இதுவே. "கண்ணடைஇய கடைக்கங்குல்" (பட்டினப். 115.) நான்காம்யாமம். நச்சினார்க்கினியரும் கடைக்கங்குலுக்கு விடியற்காலம் என்றே பொருள்கூறினர்.

"தமிழ்நாட்டிலுள்ள கோயில்களிலே பூசைசெய்யுங் காலம் ஆறாகவகுக்கப் பட்டுவழங்குதலானும் அது (சிறுபொழுது 6.) துணியப்படும்.

அது உண்மை. பூசாகாலங்கள் உஷாபூசை, சிறுகாலசந்தி, காலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, அர்த்தசாமம் என ஆறாகவே வகுக்கப் படுகின்றன. ஆனால், உஷாபூசைமுதல் உச்சிக்காலம்வரை நான்கு காலமும் பகல் 12 மணியோடு முடிவாகிவிடுகின்றன. இனி மீதம் இரண்டுகாலம் மாலையிலும் இரவிலும் நடக்கும். இவை, ஒருநாளைப் பத்துப் பத்து நாழிகையாக ஆறுகூறாக்கிச் சிறுபொழுது ஆறு என்று கூறுவதை எவ்விதம் ஆதரிக்கும்.



"இச் சிறுபொழுதாறனுள் ஒவ்வொன்றும் ஒருநாளுக்குரிய அறுபது நாழிகையுள் பத்துநாழிகையுடையதென்பர் நச்சினார்க்கினியர். அவ்வகுப்பை நாம் உற்றுநோக்கும்போது அது மிகப் பொருத்தமாகவே காணப்படுகிறது."

அவர் கணக்குப்படி பத்துநாழிகை காலை, பத்துநாழிகை நண்பகல், பத்துநாழிகை எற்பாடு ஆகப் பகல் முப்பதுநாழிகையும் முடிந்தது. இனி, இரவில் முதல் பத்துநாழிகை மாலை,—அதாவது 6 மணியிலிருந்து 10 மணிவரையினும் மாலைப்பொழுது. இது எவ்விதம் பொருந்தும்?

"வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தான்
நல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வெட் டெழுந்தாற்போற்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
ஆனாது கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ
னேனையா னளிப்பான்போ லிகலிருள் மதிசீறக்
குடைநிழ லாண்டாற்கு மாளிய வருவாற்றும்
இடைநின்ற காலம்போ லிறுத்தந்த மருண்மாலை."

என்பதும்,

"ஏல வார்குழ லிறைவிக்கு மெம்பிரான் றனக்கும்
பால னாகிய குமரவே ணடுவுறும் பான்மை
ஞால மேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலை யானதோன் றழிவின்றி வைகுமா றொக்கும்"
(கந்தபுராணம்.)

என்பதும் சூரியாஸ்தமயத்துக்கும் இரவுக்கும் இடைப்பட்டபொழுதே மாலை என்பதைக் காட்டுகின்றன. "புன்மாலை அந்திப்பொழுது" என்பதும், "சிறுபுன்மாலை" (நற்றி. 54) என்பதும், "அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாயந்திவானம்" (பெரும்பாண். 412-3) என்பதும், அப்பொழுது செவ்வானமுடைமையும், சிறிது நேரமாதலையும் தெரிவிக்கும்.

"அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்
பகலுண்டி யதுபோலப் பல்சுடர் கல்சேர
இகன்மிகு நேமியா னிறம்போல விருள்வர

"நிலவுக்காண் பதுபோல வணிமதி போதாக்
கண்பாயல் பெற்றபோற் கணைக்கா லலர்கூம்பத்
தம்புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச
.... .... .... ....
.... .... .... கறவைதம் பதிவயிற்
கன்றமர் விருப்பொடு மன்றுநிரை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொள"

என்னும் நெய்தற்கலியிலே இராப்பொழுதுக்குமுன் செவ்வானம் மறைய மறைய, கறுகறுவென்று மயங்கும் பின் அந்தியே "இருள்வர மாலை வாள்கொள" என்று வருணிக்கப்பட்டது. இன்னும் "………… மயங்கிருள் தலைவர, வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை" (கலித். 129) என்பதால் மாலையின்பின்னந்தி பகலுக்கு வரம்பு என்பதாயிற்று.

மாலைப்பொழுது முன்னந்தி, பின்னந்தி என இரு வகைப்படும். முன்னந்தி செவ்வானமுடையது. பின்னந்தி கருவானமுடையது. இக்கருவானமுடைய பின்அந்திமாலையையே ஐந்திணையம்பது "ஈரும் இருண்மாலை வந்து" என்றும், புறப்பொருள் வெண்பாமாலை "துங்கிருண்மாண்மாலை" "இருண்மாலை" என்றும் கூறுகின்றன. இவ்விரண்டையும் மாலை உடைமையினாலேயே கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும்,

"விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவட் கனறரு மந்தி மாலையாங்
கருநிறச் செம்மயிர்க் காலன் றோன்றினான்"

என்கிறார். "முன்னந்தி விளக்கிகழார்" (ஆசாரக். 29.) என்பதால் செக்கரந்தியிலேயே விளக்கேற்றவேண்டுமென்பது விதி. அதனாலேயே கூதிர்காலத்திலே முன்னந்தியாகிய செவ்வானப்பொழுதை அறிய முடியாதென்று மதுராநகரத்துப் பெண்கள் பிச்சிஅரும்பு அலர்வதை வைத்து விளக்கேற்றுகிறார்களென்று நக்கீரர் நெடுநல்வாடையிற் சொல்லுகிறார்.



இனி, "நிலவுக்காண்பதுபோல அணிமதி போதா" என்பதும் "மாசில்வீணையும் மாலைமதியமும்" (தேவாரம்) என்பதும், "மதிமாலை மாவிருள்கால்சீப்ப" (பரி. 10. 112.) என்பதும், "இக்தெழுந்து தயங்குமாலை" என்பதும் மாலையிலேயே கிழ்த்திசையில் முழுமதி விளங்கும் பூர்ணிமையன்று மாலையை வருணித்ததன்றி வேறல்ல.

இன்னும், மாலைக்குபின் வரும் இரவின் முதல்பாமத்தை மதுரைநகரம் எவ்வாறு கழிக்கிறதென்பதை மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியிலே அழகாக வருணிக்கிறார். அவர், "பகலுருவுற்ற இரவுவர……… ………..மாலைநீங்க" என்பது நமக்கு மாலைப்பொழுது இன்னதுதானென்பதைச் சீமைரசம்பூசிய கண்ணாடிபோற் காட்டிவிடுகிறது. இரவு 10 மணிவரை உள்ளபொழுதே மாலை என்று சொல்லுவது முயற்கொம்பு.

இனி, இரவு 10 மணிவரையுந்தான் மாலை என்றால் இன்றுபோல் மின்சாரவிளக்குவசதியில்லாத அக்காலத்திலே கோவலரும் பசுக்களும் ஊர்வந்துசேர்வது பகீரதப்பிரயத்தனம். தொழுவில் நிற்கும் கன்றுகளும் பசியாப்பழம் சாப்பிட்டிருக்கவேண்டும். கூதிர்காலம் வந்துவிட்டாற் சங்கடம் இன்னம் அதிகம். ஏழுமணிக்குள் சமைத்தசோற்றிற் பால்விட்டுண்பவர்கள் கதி அதோகதி. பின்அந்தியின்கழிவிலே உண்ணவேண்டுமென்பதையெல்லாம் கரியடுப்பிலிடவேண்டியதுதான். பாற்பெட்டியில்லாத காலம் அது. பாலுண்ணும் பச்சைக்குழந்தை பசிதாங்குமா?

"தொல்காப்பியத்துள் மருதத்துக்கு விதித்த "வைகறை விடியல்" என்பதை உம்மைத்தொகையாகக்கொள்ளாது பண்புத்தொகையாகக்கொண்டு வைகறையாகியவிடியலென ஒன்றாகக்கொண்டு பொழுது ஐந்தென்றலென்னையெனின், அறியாதகடாயினாய்! வைகறையும்வேறு; விடியலும்வேறு; ஆதலின் இழுக்குண்டென்பது. வேறு என்பது எற்றாற்பெறுதுமெனின், "வான்கண் விழியா வைகறையாமத்து" எனவும் "இரவுத்தலைபெயரா வைகறையாமத்து" எனவும்……………….வரும்செய்யுள்களானே வைகறை [illegible], "உடையவாரே [illegible], [illegible]விடியல் வைகினிர் கழியின்" எனவும் [illegible]யல்வெங்கதிர்காயும்" எனவும், "ஆயிடை, வெஞ்சுடர் தோன்றிவிடிந்தறையன்றே" எனவும், "வான்கண்விரிந்தவிடியல்" எனவும் வரும் செய்யுள்களானே விடியல் வேறு என்பதூஉம் அறியக்கிடத்தலாற் பெறுதுமென்பது."

பாடம் 'வைகுறுவிடியல்'தா னென்பது முன் தீர்மானிக்கப் பட்டது. "வைகுறு விடியல் போகிய வெருமை, நெய்தலம்புதுமலர் மாந்தும்" என்றால் இராப்பொழுது தன்னொடுகழியும் விடியலிலே அல்லது விடியற்காலத்திலே தொழுவிலே தாம்பை அறுத்துக்கொண்டு போன எருமை நெய்தற்பூவை மேயும் என்று பொருள். "வைகுறு விடியலியம்பியதூஉலே" என்னும் புறநானூற்றடிக்கு அதன் உரையாசிரியர் தெளிவாக 'விடியற்காலத்திற் சொல்லிய வார்த்தை' என்று விடுகிறார். ஆகவே 'வைகுறுவிடியல்' பண்புத்தொகையுமல்ல உம்மைத்தொகையுமல்ல; வினைத்தொகை. வைகுறுவிடியலுக்குப் பொருள் விடியற்காலம். "ஞாயிறு வைகுறுவணப்பு" (நற்றி 168) என்ற பிரயோகம் "வைகுறு விடியல்" வினைத்தொகைதான் என்று நிச்சயிக்கிறது.

"வேட்டை மறந்து துஞ்சுங் கொழுநர்க்குப் பாட்டி
யாம்ப லகவிலை யமலைவெஞ் சோறு
தீம்புளிப் பிரம்பின் றிரள்கனி பெய்து
விடியல் வைகறை யிடூஉ மூர்" (அகநா. 196.)

என்றதற்கு விடியற்காலத்திலேயே பெண்கள் எழுந்து அவசரமாகச் சோறுசமைத்து, கொஞ்சந் துவர்ப்புள்ள பிரப்பங்கனியிட்டுப் புளிக்குழம்புவைக்கச் சமையல்முடிந்தது. உறங்குகிறவர்களைத் தடி போடுவதற்குள் விடியற்கழிவாயிற்று. இலையிற் சோறுங் குழம்பும் பரிமாறுகிறார்கள். அப்படிப் பரிமாறும் ஊர் என்றுபொருள். "வைகலும் வைகல் வரக்கண்டும்" (நாலடி) என்பதால் 'விடியல் வைகறை' என்றதிலுள்ள வைகறை கழிவு என்னும் பொருள் தரும். இதனை, நச்சினார்க்கினியர் விடியற்கு முன்னதாகிய வைகறை யென உருபுதொக்க முன்மொழிநிலையலாயிற்று என்று கூறுவது பொருந்தாது.

"செஞ்சுடர் நெடுவே லண்ணல் செழுமலர்க் காவிற் புக்கு
வஞ்சியோ டிருந்த காலை வைகறை விடியல் செல்ல
வெஞ்சலில் சிறார் தன்னி [illegible]
துஞ்சலை யகன்று வல்லே துணுக்கமுற் றெழுந்தா ளன்றே."

(கந்தபு. வள்ளி. 170)



என்றதில் வைகறைவிடியல் செல்லத் தேவி உறக்கந்தெளிந்து தன்பக்கத்தில் மகனைக் காணாமல் துணுக்கமுற்றெழுந்தா ளென்கிறது. இங்கும் வைகறைவிடியலுக்கு அற்றைநாட்பொழுது தன் எல்லையோடு கழிவதாகிய விடியற்காலம் என்றுதான் பொருளாகையால் உம்மைத் தொகையாகாது. ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் இச்செய்யுளுக் கெழுதிய குறிப்பிலே "வைகறைவிடியல் என்பதற்கு அற்றைநாட் பொழுது தன் னெல்லையோடறும் விடியற்காலமெனப் பொருள்கொள்க. வைகுதல் கழிதல் என்னும் பொருட்டு" என்கிறார்கள்.

வைகறையும் விடியலும் வேறல்ல. அவை ஒருபொருட்சொற்களே. அதனை,

"கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போல" (ஐங்குறு 188.)

என்றதற்கு அதன் உரையாசிரியர் விடியற்காலம் மலரும் நெய்தல் என்பதாலும், "காலையும் பகலுங் கையறு மாலையும், ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப், பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்" என்னும் குறுந்தொகைப்பாட்டு வைகறையையே விடியலென்று கூறுவதாலும் அறியலாம். ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் 'வைகறைத்துயிலெழு' என்னும் ஆத்திசூடிக்கு 'நீ தினந்தோறும் விடியற்காலத்திலே நித்திரை விட்டெழுந்திரு' என்றே உரையெழுதியிருக்கின்றார்கள்.

இன்னும், விடியற்காலையில்தான் விடிவெள்ளி உதிக்கும். அவ் விடிவெள்ளியின் உதயத்தைக் கூறவந்த நல்லிசைப்புலவரான முடத்தாமக்கண்ணியார் "விடிகதிர் வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" (பொருந. 71-2.) என்பதாற் சந்தேகமில்லாமல் வைகறையும் விடியலும் ஒன்று என்றாயிற்று. மேலும் விடியற்காலத்திலே முல்லைநிலத்துப் பெண்கள் எழுந்து தயிர்கடைந்து வெண்ணெயெடுத்து மோர்ப்புள்ளி தெறித்த வாயையுடைய மோர்ப்பானையைப் பூவாற்செய்த சுமட்டில் வைத்துக் குறிஞ்சிநிலத்துக்குப்போய்க் காலையில் மோர்விற்பதை,

"நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்த மொலிப்ப வாங்கி
யாம்பி வான்முகி ழன்ன கூம்புமுகை

யுறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனி
.... .... .... .... ....
.... .... .... .... ஆய்மகள் "

(பெரும்பாண் 155-62)

என்று கடியலூர் உத்திரங்கண்ணனார் சொல்லுகிறார். இவ்விருபெரும்புலவர்களும் விடியலைச் செறிந்த இருள் உள்ள விடியல் என்று சொல்லும்போது ஐயரவர்கள் தடித்த எழுத்தில் "விடியல் சூரியோதயம் தொட்டுள்ளகாலம்" (சிறுபொழுது. பக். 59. வரி. 5) என்பது 'காக்கை வெள்ளை' என்பதுபோலிருக்கிறது.

விடியற்காலம் அல்லது வைகறையாமம் ஏழரைநாழிகை. அதில் சூரியோதயத்துக்குமுன்னுள்ள மூன்று நாழிகை 'அருணோதயம்' எனப்படும். அந்த அருணோதயத்துக்குமுன்னுள்ள நாலரைநாழிகையையே "வான்கண்விழியா வைகறையாமம்" என்று சிலப்பதிகாரம் கூறிற்று. இனி அருணோதயகாலத்தையே "உடையவாறே கள்ளிருளலரி, விரிந்தவிடியல் வைகினிர் கழிமின் (155-6.) என்றும், "வான கண் விரிந்த விடியல்" (257) என்றும் மலைபடுகடாம் கூறும். "உடையவாறே...............கழிமின்" என்பதற்கு "வழிகள், பன்றி தினைப்புனத்தை நெருக்குகையினாலே பொருத்திவைத்த பெரிய கற்பொறிகள் உடையன. ஆகையினாலே இராவில் தங்கி அருணோதயமான விடியற்காலத்திலே செல்லுங்கள் என்பது பொருள். அலரி அருணன் என்பன ஒருபொருட் சொற்கள்." இனி, 'அலரிவிரிந்த விடியல்' என்பதற்குப் பூக்கள் மலர்ந்த விடியற்காலம் என்றும் பொருள்கொள்ளலாம். "வான்கண்விரிந்த விடியல்" என்றால் வானில் அருணோதயமான விடியற்காலம் என்று பொருள். 'கண்' என்றது இங்கு அருணனை. மேலும், அருணோதயத்திலும் காலைநேரத்திலுமே வழிநடக்க முடியும்; வெயிலேறிவிட்டால் முடியாது. பிரயாணியின் சங்கடத்தைத் தெரியாதவர்கள்தான் சூரியோதயம்வரையும் உறங்கிவிட்டுப் பின் வழிநடக்கச் சொல்லுவார்கள். கௌசிகனார் அவ்விதம் சொல்லக்கூடியவரல்ல.



"ஆயிடை, வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" என்றதில் 'தோன்றி' என்னும் வினை சுடருக்குரியது. 'விடிந்தது' என்னும் வினை இருளுக்குரியது. "தோன்றி" என்பது பிறகருத்தாவின் வினைகொண்டு முடியாது. ஆகவே அத்தோன்றியென்பது தோன்ற என்னும் எச்சத்திரிவு. அதற்குச் சுடர்தோன்றும்படி விடிந்தது என்றுதான் பொருள். இவைகளால் 'வைகறையும் வேறு; விடியலும் வேறு' என்று ஐயரவர்கள் சொல்லுவது சரியல்ல. வைகறையும் விடியலும் ஒன்றே.

இவற்றையெல்லாம் திருவுளத்துக்கொண்டே ஸ்ரீ சுவாமிகள் "விடியல்வெங்கதிர்காயும்" என்னும் கலிக்கு "விடியற்பின்னர்த்தாகிய வெங்கதிர் என்பதே பொருளாம்" என அருளிச்செய்தார்கள்.

"பரிபாடலிலும் "விடியல் அங்கி யுயர்நிற்க" என்பதற்கு, எற்றேற்றமென்னும் பொருளமையச் 'சிங்கராசியிற் சூரியன்நிற்க' எனப் பொருள்கூறுவர் பரிமேலழகரும்."

11 ஆம் பரிபாட்டு முதல் பதின்மூன்றடிகாறும் ஆவணிமாதம் சந்திரகிரகணத்தன்று உள்ள கிரகநக்ஷத்திர நிலை கூறுகிறது. அதிலே "விடியல் அங்கியுயர்நிற்ப" என்பதற்குப் பரிமேலழகர் 'கார்த்திகை உச்சமாக விடிதலுண்டாக என்று பொருள்கூறிப் பின், சூரியன் இருந்த ராசி பாட்டிற் கூறப்பட்டமையால் "புலர்விடியல் அங்கி உயர்நிற்ப" என்று கூறியதைக்கொண்டு ஆதித்தன் கடகராசியைவிட்டுச் சிங்கராசியில் அடிவைத்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார். "ஆதித்தன சீயத்தை அடைய வென்பார் 'புலர்விடியல் அங்கி உயர்நிற்ப' என்றார்" என்பதுதான் அவர் சொல்லுவது. இவ்விதமாகவும் ஐயரவர்கள் 'விடியல் அங்கி உயர் நிற்க' என்பதற்குச் சிங்கராசியில் சூரியன் நிற்க என்று பரிமேலழகர் பொருள்செய்தாரென்றும், அப்படிப் பொருள்செய்தாலும் எற்றேற்றமென்னும் பொருள் அமையும் என்றும் சொல்லுகிறார்கள்; ஆகையால் ஐயரவர்கள் அவ்வுரைப் பகுதியை நன்றாகப் படித்துத்தான் எழுதினார்களா என்று நாம் கேட்கிறோம்.

"அற்றேல், குறுந்தொகையினுள், "காலையும்......விடியலும் என்று" என விடியலை வைகறையென்றே கூறலின், விடியலை வேறாகக்கோடல் பொருந்தாதன்றோ எனின், இருள்புலருங்காலமாதல்பற்றி வைகறையையும் ஒரோவழி விடியலென்று கூறுவதன்றி விடியல் வைகறையாகாதென்பது நாம் முன்னர்க் காட்டிய உதாரணங்களால் உணர்ந்துகொள்க."

அவர்கள் 'வைகறையும் வேறு; விடியலும் வேறு' என்றதற்குக் காட்டியவைகள் அவை இரண்டும் ஒன்று என்ற கொள்கையைத்தான் ஆதரிப்பன என்று நாம் தெளிவாகக் காட்டியிருக்கிறோம். மேலும், "விரிகதிர், வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" என்று முடத்தாமக் கண்ணியார் கூறிய அதே விடியலையே அவர் வருணித்தபடியே இளங்கோ வடிகளும் சிலப்பதிகாரத்திலே "வைகறையாமம் வாரணங்காட்ட, வெள்ளி விளக்க நள்ளிருள்கடிய" என்பதாலும், "வெள்ளி முளைத்த விடியல்" (வெண்பாமாலை. பாடாண். 18.) என்பதற்கு சாமுண்டிதேவநாயகர் "வெள்ளியெழுந்த வைகறையாமத்து என்று பொருள்கூறுவதாலும் விடியல்தான் வைகறை வைகறைதான்விடியல். இவற்றால் அவர்கள் "விடியல் வைகறை ஆகா"தென்பதும் ஆகிவிட்டது.

"அற்றேல், நாள்வெயிற்காலையிற் புணர்தல் முறையன்மையின் ஊடல் செல்லாதன்றோவெனின், இது பரத்தைவயிற் பிரிந்துவந்தமையாலான பெருந் துனியாதலிற் செல்லுமென்பது..........கூடலின்றோவெனின் அவன் ஊட றணிந்து மனமுமொன்றியபின் கூடுவானாதலின் அதன்கண் ஆராய்ச்சியின் றென்பது."

'ஊடல் என்பது நகையை நொடிப்பதுபோல வெறும்வினையல்ல. "உப்பமைந் தற்றாற் புலவி அதுசிறிது, மிக்கற்று நீள விடல்" ஆகையால் ஊடலுக்குப்பின் கூடல்நிகழ்ந்ததாகவே சான்றோர் செய்யுட் செய்திருக்கிறார்கள். ஒரு வீட்டுக்குள்ளே காதலன் கிழக்கும் காதலி மேற்கும் பார்த்திருந்ததாக அன்பின் லாவண்யங்கள் துலங்கும் சப்த சித்திரத்திற் காண்பது அபூர்வம். "கண்ட கடவுளர் தம்முளு நின்னை, வெறிகொள் வியன்மார்பு வேறுகச் செய்து, குறிகொளச் செய்தார் யார்? செப்பு. மற், றியாருஞ் சிறுவரைத் தங்கின் வெகுள்வர். செறுத்தக்காய்! தேறினென். சென்றீ. நீசெல்லா விடுவாயேற் றாகலத்துக் கொருசார் மேவிய, கெட்டிருங்கூந்தற் கடவுளரெல்லார்க்கும், முட்டுப்பா டாகலு முண்டு" (கலித். 93.) என்று தலைவி சொல்லிவிடுவதாற் கூட்டமில்லை யென்று நினைத்துவிடலாகாது. தலைவியின் மனமும் சொல்லும் புளியம் பழமும் ஓடும்போலிருப்பதால் அவள் மறுப்பைக்கொண்டு கூட்டமில்லை யென்பது மனோலோகத்தின் ரகசியம் தெரிந்துசொன்னதாகக் கருதப் படமாட்டாது. கவிகளின் மனந்தான் அந்த ரகசிய அறையில் நுழை யும். சுவாமிகள் கவிராஜசிங்கம். ஆகையால் அவர்கள் "ஊடலிறுதிக்



கட் கூடலொருதலை" என்றார்கள். "பொய்கூறேன்; அனவகையால் நான்கண்ட கனவுதான், நனவாகக் காண்டை நறுநுதால்! பன்மாணுங், கூடிப்புணர்ந்தீர் பிரியன்மி னீடிப், பிரிந்தீர் புணர்தம்மி னென்பனபோல, வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயில், ஆனாதகவும் பொழுதினான் மேவர, நான்மாடக்கூடல் மகளிருமைந்தருந், தேனிமிர் காவிற் புணர்ந் திருந்தாடுமா, ரானா விருப்பொடு அணியயர்பு காமற்கு, வேனில் விருந் தெதிர்கொண்டு" (92) என்ற மருதக்கலிப்பாட்டு வைகறையில் ஊடலுங் கூடலும் நிகழ்ந்ததை மலையிலிட்டவிளக்குப்போற் காட்டிவிடுகிறது.

களவு கற்பொழுக்களில்வரும் காதலர்கள் பெரும்பாலும் சர்ப்ப சீமான்கள்; கல்விச்செல்வம் வாய்ந்தவர்கள்; நாணமுடையவர்கள். அவர்கள் கண்ணும் கண்ணும் கலக்க 'இருவரும் மாறிப்புக்கிதயமெய்தி னார்'கள். அவர்கள்மனம் அனிச்சப்பூவினும் மெல்லிய. பேராசிரியர் தலைமகனையும் தலைமகளையும் கூறும்போது "இவனுக்கு ஆண்குழுவின் மிக்காரு மொப்பாரு மில்லை, இழிந்தாரல்லது; இவளு மன்னள்." என்கிறார். அத்தகைய இருவரும் ஊரறியக் கணவனும் மனைவியுமான பின்பு பகலிற் கூடுவானேன்? அதனாலேயே ஸ்ரீசுவாமிகள் 'கற்புக்காலத்து நாள்வெயிற்காலையிற் புணர்தல் முறையன்மையின்' என்றார்கள். 'காலை யிற் கூட்டம் ஆகா'தென்று ஆசாரக்கோவையும் (43) கூறுகிறது.

"பிற்காட்டிய செய்யுளில் (தணந்தனை........காணிய) காலையமைந்தது எப்படி அறியப்படுமெனின் "அணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய" என்றதனானே விடியற்காலத்துப் பூமுதலிய சூடி அவற்றின் நாற்றச்செவ்வி குலையாமல் வந்தா னென்பது பெறப்படுதலின் என்பது.......................... இன்னும், குறுந்தொகையினுள் வரும், "காலையெழுந்து கடுந்தேர் பண்ணி" (45) என்னுஞ் செய்யுளும் மருதத்து விடியல்வந்தது; என்னை? தலைவி பெரி தும் விளக்கமுடையன் என அறியக்கிடந்தது விடியலேயாதலின்; 'எல்லினன் பெரி'தென்பது பிறகுறிப்பென்றார் அந்நூலுரையாசிரியர். அதனானுமறிக."

"தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய"

இது காமக்கிழத்தி தலைவனைப்பார்த்துச்சொன்னது. தலைவன் வைகறையிலே காமக்கிழத்தியிடம் வந்தான். சந்தனமணத்தையும் பூ

மணத்தையும் கண்ட காமக்கிழத்தி அவனைப்பார்த்துத் தெய்வம்போலே மணக்கும் நின் பரந்த மார்பைக்காண உன் தோழன் வரமாட்டானே? என்றாள். இதனால் காலை வந்ததென்று சொல்வதெப்படி? இனி 'வீங்குநீர்' என்னும் மருதக்கலியுள்,

> அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
> மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
> பொதுக்கொண்ட கவ்வையிற் பூவணிப் பொலிந்தநின்
> வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை.

என்றது தலைவி சொல்வது. அவள், "ஆரவாரத்தாற் பொலிவுபெற்ற சிறப்பில்லாமையைக் கொண்ட *பூப்பேசிக்கொள்கின்ற கலியாணத்தினுண்டான நின்னுடைய அழகிய நாறுகின்ற மணத்தினை வைகறைப் பொழுதிலே யாங்கள் பெற்றது 'மணமனையிடத்தாய்' என்று பிறர் சொல்ல நினக்குண்டான வளப்பத்திலும் மாட்சிமையுடையதல்லவா?" என்கிறாள். இது தலைவி சொல்லுவதாகையாற் சொற்கள் ஜாக்ரதையாக நிறுத்துப்போடப்பட்டிருக்கின்றன. "தணந்தனை..........காணிய" என்றது காமக்கிழத்தி சொல்வதாகையாற் சொற்கள் பச்சையாகவிருக்கின்றன. இரண்டுக்கும் இதுதான் வித்தியாசம். தோழி, தலைவிபால் மான்மதச்சாந்து முதலியனவும், பலபூக்களும் விரவிநாறும் நாற்றத்தாற் கூட்டம்உண்மையை அறிந்தாற்போல இங்கே காமக்கிழத்தியும் தலைவன் மார்புநாற்றத்தாற் பரத்தையிற்கூட்டமுண்மையறிந்து "அணங்குபோற் கமழும்நின் அலர்மார்பு" என்றதல்லது வேறல்ல.

> "காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
> வாலிழை மகளிர்க் கழீஇய சென்ற
> மல்ல லூரனெல்லினன் பெரிதென
> மறுவருஞ் சிறுவன் றாயே
> தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே".

இது தலைவியைப்பார்த்துத் தோழி சொல்வது. இதனை நச்சினார்க்கினியரும் மருதத்திற் காலைவந்ததற்கு எடுத்துக்காட்டுகிறார். (தொல். பொருள். அகத். 8. உரை) தலைவி ஊடினாள். அவள் ஊடல்

*மாலை விலைபேசிக்கொள்ளுதல் சிலப். 3. 164—6. பரி. 20. 79. பார்க்க.



தீர்ந்து உடம்படல்வேண்டும். அதற்குத் தோழி, "'காலையிற் காரியஞ்செய்ய ஆயத்தமாகி வண்டிகட்டிப் பரத்தையரை நீராட்டச்சென்றவர் பெரிதும் பெருமை உடையவர்' என்கின்ற செல்வமகனைப்பெற்ற தாயே! இந்நற்குடியிற் பிறத்தல் கோபிக்கத்தக்கது" என்கிறாள். இதனால் ஊடல்நிகழ்ந்தது காலையென்று எப்படிச்சொல்லலாம்? புனல்வரவுகேட்டுக் காலையிற் பரத்தையரோடு நீராடப்போனவன் திரும்பத் தலைவியிடம் எப்பொழுது வருவான்? 'காலை' நச்சினார்க்கினியர் சொல்வதுபோலப் பத்துநாழிகையல்ல. 'ஈரந்தி' (ஆசாரக். 43) என்பதால் அதுவும் மாலைபோலச் சிறுபொழுதுடையதே. காலையிற் போனவன் கோழிமுங்கினாற் போலே முங்கிவிட்டு அக்காலையிலேயே தன்வீட்டுக்குவருவது முடியாத காரியம். காலையிலே திருமருதந்துறைக்கு நீராடப்போன மதுரைநகரத்தார் மாலையில்தான் திரும்பினார்களென்று 10-ஆம் பரிபாடல் கூறுகிறது. அதற்குப் போக்கென்னை?

தலைவன் பரத்தையரோடு நீராடியது நேற்று. அது மூடுமந்திரமல்ல. இன்று வைகறையில் வீட்டுக்குவந்தவன் கூசிப்போய் வெளியில் நிற்கிறான். தலைவி வீட்டுக்குள் இருக்கிறாள். தோழி தலைவன்வரவைச் சொன்னாள். தலைவிக்கு நேற்றைச்சம்பவம் அவள்மனசைவிட்டகலாது கத்திவெட்டுப்போல வருத்தியதால் "ஊரன் பெரிதும்ஒளியுடையவன்" என்றாள். இதற்குத் "தலைவி, பெரிதும் விளக்கமுடையானென அறியக் கிடந்தது வைகறையாகாது; நாள்வெயிற்காலை" என்பது சரியாகுமா?

தலைவி, தலைவன் பெரிதும் சிறுமை உடையவன் என்ற குறிப்புத் தொனிக்க 'எல்லினன்பெரிது' என்று சொல்லுவதால் அதற்குரை எழுதியவர் "மல்லலூரன் எல்லினன்பெரிது" என்றது பிறகுறிப்பு என்கிறார். "ஒன்றொழிபொதுச்சொல்" என்னும் சூத்திரத்தில்வராது "உவர்க்கடலன்ன செல்வருமுளரே" என்றாற்போல 'எல்லினன்பெரிது' வந்தமைபால் உரை எழுதினவர் அதைப் பிறகுறிப்பு என்கிறார். இப்பொழுது புதுச்சிருஷ்டியில்வந்த ஒரு பொருந்தாத கருத்தைத்தான் அந்த உரை எழுதினவரும் கருதியிருக்கிறார் என்பது பொருந்தாது.

"விடியலும் அவர்க்கு (நக்கீரருக்கு) உடன்பாடென்பது "வைகறை விடியன்மருதம்" என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தைப் பிரமாணமாகக்கொண்டமையானே அறியப்படும்."

இறையனாரகப்பொருள் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பிலும், ராவ்பகதூர். எஸ். பவானந்தம்பிள்ளையவர்கள் பதிப்பிலும் "வைகுறுவிடியன்மருதம்" என்றுதானிருக்கிறது. அதனை ஐயரவர்கள் 'வைகறைவிடியல்' என்று திருத்தியது சரியல்ல. கருநாடகதர்பாரில் சுகாத்தியர்போன்றவர்களும் இக்காலத்திற் சில பட்டதாரிகளுந்தான் மூலபாடத்தைக் கூசாமற் கைவைத்துத் திருத்தியிருக்கிறார்கள். இப்பொழுது கனம் ஐயரவர்களும் அவர்களுக்குத் துணையாகிவிட்டார்கள்.

நக்கீரர், சூத்திரத்தில்வரும் வைகுறுவிடியலை வினைத்தொகையாகக்கொண்டு வைகறையும் விடியலும் ஒன்றாகக் கருதியே "மருதத்திற்குப் பொழுது வைகறையாமம்" என்று சொல்லி அதற்குப் பிரமாணமாக இச்சூத்திரத்தை யெடுத்துக்காட்டியிருக்கிறார். தான் காட்டப்போகும் பிரமாணத்திலுள்ள 'வைகுறுவிடியல்' உம்மைத்தொகையென்று அவர் கருதினால் விடியலைவிட்டுவிட்டு வைகறையாமம் ஒன்றையே மருதத்துக்குக் கொள்வாரா? உரையாசிரியர்கள் தாம் உடம்பட்டதைத் தெளிவாக எழுதாமல் பிரமாணத்தால் அறிந்துகொள்ளும்படி விடுவதை நாம் இதுவரை கண்டதில்லை.

'வதுவையங்கமழ்நாற்றம்வைகறைப்பெற்றதை' என்றது மருதத்துக்கு வைகறை உரியபொழுது என்று காட்டிவிடுகிறது. பரத்தை வீட்டுக்குப்போனதலைவன் பலபலவென்று விடிந்தபின் வருவது பெருமையல்ல. இன்னும், நக்கீரரும் மருதத்துக்குப் பொழுது வைகறையாமம் என்று கூறி அதற்குப் பிரமாணமாக "வைகுறுவிடியன்மருதம்" என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தையே யெடுத்துக்காட்டுகிறார். நம்பியகப்பொருளும் "இருள்புலர்காலை மருதத்துக்குரித்தே" என்று வைகறைமட்டுமே மருதத்துக்குரித்தாகக் கூறுகிறது. அதன் உரையாசிரியரும் மருதத்திற்கு விடியற்காலம் உரித்தென்று உரைகூறி "வைகுறுவிடியன்மருதம்" என்ற சூத்திரத்தையே பிரமாணமாகக் காட்டுகிறார். அடியார்க்குநல்லாரும் மருதத்துக்கு வைகறையொன்றே கொண்டாரென்பதை "இன்னிளவேனில் வந்ததிவணென" என்பதனாற் பெரும்பொழுதும், "வான்கண்விழியா வைகறையாமத்து" என்பதனாற் சிறுபொழுதும் என்று அவர் சிலப்பதிகாரப் பதிகவுரையிற் கூறுவதாலறியலாம். இவைகளால் "வைகுறுவிடியன்மருதம்" என்றதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியருந்தவிர மற்ற எல்லாரும் "வைகறை" என்றே பொருள்கொண்டார்களென்றாகிவிடுகிறது.



இனி, "எற்பாடு, நெய்தலாதல் மெய்பெறத்தோன்றும்" என்றதற்குச் சுவாமியவர்கள் 'எற்பாடு' காலை என்று கூற ஐயரவர்கள் அதற்கு என்னசொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்.

"எற்பாடு என்பதற்கு ஞாயிறுபடுதலென உரையாசிரியர்யாவரும் கொள்ளவும் சிவஞானமுனிவர் ஞாயிற்றின் உதயம் என்றனர். நாயகரைப்பிரிந்தோர் வருந்துவது இராக்காலமன்றிப் பகற்காலமன்மையானும், பகற்காலம் காமந்தணியுங்காலமன்றி மிகுங்காலமன்றாதலானும்,............ நெய்தற்றிணைபாடினோரெல்லாம் ஞாயிறுபடுங்காலமாகவேவைத்துப் பாடியிருத்தலானும், ஞாயிறுபடுதல் கண்டு இரங்கிய தலைவி, தோழி முதலியோர் ஆற்ற ஆற்றியிருக்கும் மாலைக்காலத்துக்குமுன்னர் இரங்குதற்குரியகாலங் கூறுதலே முறையாதலானும், ஞாயிறுபடுதலென்பதே பொருத்தமாகவும், உதயமென்று முனிவர்கூறிய கருத்து யாதோ அறியேம். உதயமேயெனில் தொல்காப்பியர் வெய்யோன்தோற்றமென விளங்கக்கூறுவாராதலானும் ஞாயிறுபடுதலென்பதே பொருத்தமாம்.

நாயகரைப்பிரிந்தவர்கள் பகலிலும் வருந்தினார்களென்று நெய்தற்கலி கூறுகிறது. ஆகையாற் பகற்காலத்திற் காதலி வருந்தாள் என்று கூறுவது சரியல்ல. பகல் காமத்தைத்தணிக்காதென்பது, ராவணன் பகலை அழைத்தும் அது அவன் காமவேதனையைத் தணிக்கவில்லையென்று கவிச்சக்ரவர்த்திகூறுவதனாலும்,

“கார்வந்தா லன்னகறைக் கண்டனார் செங்கதிரோன்
றேர்வந்தா லும்பொழில்சூழ் தென்னருணை நன்னாட்டி
லார்வந்தா லுந்தணியா தன்னமன்னீ ராறனா
நீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே”

என்று அருணைக்கலம்பகமுடையார் சொல்வதனாலும் அறியலாம்.

ஐயரவர்கள் சொல்லுகிறபடி எற்பாடு என்னும் காலம் பகல் 2 மணி முதல் 6 மணி வரையும் உள்ள காலமாகும். இது பின்பகல். எற்பாடல்ல. இப் பின்பகலை எற்பாடென்று கூறி வருணித்த ஆசிரியர்கள் முன்னுமில்லை; பின்னுமில்லை. “உப்பின்குப்பை யேறி எற்பட, வருதிமில் எண்ணுந் துறைவனொடு” (அகநா. 190.) என்றதிலே மாலையில் வந்த திமிலையே எற்படவருதிமில் என்கிறது. மாலையும் எற்பாடும் ஒருபொருட்சொற்களே. இதனை, “மாலைவந்தன்று” (ஐங்குறு. 116.) என்றதற்கு அதன் உரையாசிரியர் எற்பாடு என்று பொருள்செய்வதால் அறியலாம்.

நெய்தற்றிணைபாடினவர்களெல்லாம் அத்திணைக்கே உரிய காலை வரப் பாடினதோடு நண்பகலும், மாலையும், நடுயாமமும் வரப் பாடியிருக்கிறார்கள். அப்படியிருக்கவும், “நெய்தற்றிணைபாடினோரெல்லாம் ஞாயிறுபடுங்காலமாகவேவைத்துப் பாடியிருத்தலானும்” என்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில்மறைப்பதுபோலாகும்.

எற்பாடு என்னுஞ்சொல் அந்தியென்னும் சொல்லைப்போலக் காலை, மாலை என்னும் இருபொழுதையும் உணர்த்தும். ‘அந்தியு நண்பகலும் அஞ்சுபதஞ் சொல்லி’ (சுந்தர. தே. 842) ‘உச்சியம் போழ்தோ டிடையாமம் மீரந்தி’ (ஆசாரக். 43) என்பதால் காலை, மாலை என்னும் இருபொழுதையும் அந்தியென்னும் ஒருசொல்லே காட்டிவிடுகிறது. அவ்விதமே ‘எற்பாடு’ என்னும் சொல்லும் “எற்படக், கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்” (திருமுரு. 74 - 5.) என்றபோது காலையையும், ‘எற்படுபொழுதி னிளநிலாமுன்றில்’ என்றபோது மாலையையும் உணர்த்திற்று நச்சினார்க்கினியரும் ‘எற்பட’ என்றதற்கு ‘ஞாயிறுதோன்றினகாலத்தே’



என்று பொருள்செய்திருக்கிறார். இவ்விதம் காலை, மாலை யாகிய இரு பொழுதையும் எற்பாடு குறிக்குமாயினும் “எற்பாடு, நெய்தலாதன் மெய்பெறத்தோன்றும்” என்ற தொல்காப்பியச் சூத்திரத்திலே வரும் ‘எற்பாடு’ என்னும் சொல் காலையையே உணர்த்தும். முன், ‘காருமாலையு முல்லை’ என்று ஆசிரியர் முல்லைத்திணைக்கு மாலை கூறிவிட்டமையால், பின், “எற்பாடு நெய்தல்” என்றபோது காலையை உணர்த்துமன்றி மாலையை உணர்த்துமா ?

பிற்காலத்திலே இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் எற்பாட்டுக்குப் பின்பகலென்று ஒரு புதிய உரைசெய்யவே அது ஆசிரியர் தொல்காப்பியனார்கருத்துக்கு மாறுபட்டிருப்பதைக்கண்ட நாற்கவிராசநம்பி சிறுபொழுது கூறும்போது ‘காலை’ என்றுமட்டும் கூறி நிறுத்தாது சூரியன் உதிக்கின்ற காலை என்னும் பொருள்பட எற்படுகாலை என்கிறார். ‘எற்படுகாலை’ என்பதற்குச் சுன்னாகம் குமாரசாமிப்புலவரவர்களும் “ ‘எற்படு’ என்பது ‘காலை’ என்பதனை நன்குபுலப்படுத்திவந்த அடைமொழி”என்றார்கள்.

“இன்னும், “ எற்படுபொழுதி னிளநிலாமுன்றில் ” எனவும், “படுங்கதிரமையம் பார்த்திருந் தோர்க்கு ” எனவும் சிலப்பதிகாரங் கூறுமாற்றானும் எற்பாடு ஞாயிறுபடுதல் என்பது அறியலாம்.”

சிலப்பதிகாரம் ஊர்காண்காதையிலே, மதுரைநகரத்துப் பொதுமகளிர் அந்நகரத்துச் செல்வர்களோடு பொழுதுபோக்குவதைக் கூறவந்த இளங்கோவடிகள் 70 முதல் 75 ஆம் அடிகாறும் காலையிற் பொழுது போக்குவதையும், 76 முதல் 82 வரை நண்பகற்பொழுதுபோக்குவதையும் கூறிப் பின்,

“எற்படு பொழுதி னிளநிலா முன்றிற்
றாழ்தரு கோலந் தகைபா ராட்ட
வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்து”

என்கிறார். இது ஆடிமாதம். உத்தராயணமாகையால் பகல்விரிந்தும் இரவு சுருங்கியு மிருக்கும். மேலும் அருங்கோடைக்காலம். அடியார்க்கு

நல்லாரும் சூரியன் காலைதொடங்கி மாலையளவும் ஒருதன்மையாகக் காயும் என்கிறார். இளநிலாமுற்றம் மதிநிலவை அனுபவிப்பதற்கும், "வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி, இளநிலா முன்றிலி னிளவெயில் நுகர" என்றதால் பனிக்காலத்திலே காலையில் இளவெயிலை அனுபவித்தற்கும் உரிய திறந்தவெளி. இந்த ஆடிமாதத்திலே மாலைக்குமுன் காலெடுத்துவைக்க முடியாது. இந்தஇடத்திலே பொதுமகளிர் தொழுநர் கோலஞ்செய்துபாராட்டப் பூஞ்சேக்கையில் இருந்தார்களென்பதால் எற்படுபொழுது மாலைக்காலமே ஆனி, ஆடியில் வழிநடப்பு காலையிலும் மாலையிலும் இரவிலும் அல்லது முடியாதாகையால் "படுங்கதிரமயம்" என்றது மாலையைத்தான். 2 மணிமுதல் உள்ள எற்பாட்டையல்ல,

"அற்றேல், "காலையும்...........விடியலும்" எனக்கூறிய பொழுதினுள் எற்பாடு கூறப்பட்டிலதே யெனின், விடியலை வைகறையுளடக்கி நக்கீரனார் கூறியவாறுபோல எற்பாட்டை மாலையுளடக்கிக் கூறினாரென வுணர்க. அங்ஙனமே சிலப்பதிகாரக்காரரும் "வையமோ கண்புதைக்க வந்தாய் மருண்மாலை" என மாலையுளடக்கிக் கூறுமாற்றானும் அறியப்படும். இதுபற்றியே சிலப்பதிகாரவுரையாசிரியரும், நெய்தற்குச் சிறுபொழுது எற்பாடு எனக்கூறி இவ்வடியை உதாரணமாகக் காட்டினார்."

குறுந்தொகையுள் இந்தக் 'காலையும் மாலையும்' என்னும் பாட்டைப் பாடினவர் சங்கப்புலவர்களுள் ஒருவரான அள்ளூர் நன்முல்லையார். அவர்காலத்திலே சிறுபொழுது ஐந்து என்ற கொள்கையே இருந்திருக்கிறது. அது இருக்கட்டும். அவர் அச் சிறுபொழுதைக் 'காலையும் பகலும் கையறு மாலையும், ஊர்துஞ் சியாமமும் விடியலும்' என எண்ணும்மை கொடுத்தெண்ணிச் சொல்லும்போது எற்பாட்டை மாலையுளடக்கிக் கூறினார் என்று சொல்லுவது பொருந்துமா? அது சுருங்கச் சொல்லி விளங்கவைத்தலாமோ! பஞ்சபூதங்களையும் கூறவந்த முரஞ்சியூர் முடிநாகராயர் "மண் டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்புதைவரு வளியும், வளித்தலைஇய தீயும், தீ முரணிய நீரும்" என்றாற்போலச் சங்கத்துப் புலவரெல்லாம் தாம் கூறவந்தபொருளை எண்ணிச்



சொல்லும்போது முழுதும் எண்ணிச்சொல்வதன்றி ஒன்றை ஒன்றுள் அடக்கிக்கூற நாம் கண்டதில்லை.

களவியலுரையிலே மூலத்தில் ஐந்திணை என்றதற்கு வியாக்யானம் செய்யவந்த நக்கீரர் அல்லது பேராசிரியர் மரபியலுரையிலே 'புலவுத்துறந்த நோன்புடையார்' என்றும் 'பொய்கூறார்' என்றும் புகழ்ந்த ஒரு தவசி அவற்றிற்குரியவைகளையெல்லாம் விளக்கமாகவும், விரிவாகவும் கூறி இன்னும் காணாதென்று தொல்காப்பியத்திலிருந்து பிரமாணம் காட்டிச்செல்லும்போது அதே இடத்திலேயே 'அவர் விடியலை வைகறையுளடக்கிவிட்டார்' என்று கூறுவது சரியா? 'ஐந்திணை' என்பதற்குப் பலபக்கங்கள் உரைபெழுதும்போது இந்த ஒன்றைமட்டும் அடக்கிவிட அவருக்கென்ன அவசியம்?

போதாக்குறைக்கு இளங்கோவடிகளும் எற்பாட்டை மாலையுளடக்கி "வையமோ கண்புதைக்க வந்தாய் மருண்மாலை" என்றாராம். முதலில், பாடம் 'புதைக்க' என்பதல்ல. 'புதைப்ப' என்பதே. மேலும் இந்த அடக்கத்தை, "பல்புகழ்நிறைந்த வெல்போர் நந்தர், சீர்மிகு பாடலிக் குழீஇக், கங்கைநீர்முதற்கரந்த நிதிய"த்தை——அடியார்க்குநல்லார் கண்டு 'நெய்தற்குச் சிறுபொழுதெற்பாடெனக்கூறி இவ்வடியை உதாரணமாகக்காட்டினார்' என்பது பொருந்தாது. அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரப்பதிகவுரையிலே "நெய்தற்றிணை நிலமுதற்பொருள்..... .... சிறுபொழுது; "வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை" என்பதனால் மாலை" என்றதன்றி எற்பாடென்று கூறவுமில்லை. அதற்கு இவ்வடியை எடுத்துக்காட்டவுமில்லை.

"இன்னும், நச்சினார்க்கினியர் "இனி வெஞ்சுடர் வெப்பந்தீரத் தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நீழற்செய்யவும், தண்பதம்பட்ட தெண்கழி மேய்ந்த பல்வேறுவகைப்பட்ட புள்ளெலாங் குடம்பைநோக்கி உடங்குபெயரவும் .......
......சிறத்தலின் எற்பாடு நெய்தற்கு வந்தது"-(தொல். பொருள். 8. உரை.) எனக் கூறிய கருத்திற்கேற்ப முறையே நற்றிணையிலும், அகநானூற்றினும் "பெருங்கடன் முழங்கக்..............பண்புமா நற்றே" (நற். 117.) "நெடு

வேண் மார்பி..................பெருங்கழி நாட்டு" (அகநா. 120) எனக் கூறப்படுதலானும், அவர்கருத்தே ஈண்டுப் பொருத்தமாதல் காண்க. இன்னும், நற்றிணையுள்ளும், ' ஞாயிறு ஞான்று...........யன்றிற்குரலே" (நற்றி. 218.) என எற்பாடு வருதலும், பிற பழந்தமிழ்நூல்களிலும் இவ்வாறு வருதலும் நோக்குக."

"பெருங்கடன் முழங்கக் கானன் மலர
விருங்கழி யோத மில்லிறந்து மலிர
வள்ளிதழ் நெய்தல் கூம்பப் புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேரச்
செல்சுடர் மழுங்கச் சிவந்துவாங்கு மண்டிலங்
கல்சேர்பு நண்ணிப் படரடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண் மாலை "

என்னும் இந் நெய்தற்றிணைச்செய்யுளிலே கடல்முழங்கிற்று. கழிச்சோலை மலர்ந்தது. கழிவெள்ளம் மனையெல்லை கடந்து பெருகியது. நெய்தற்பூக்கள் குவிந்தன. புட்கள் தங் கூடுகளுக்குச் சென்றன. சூரியன் செக்கச்செவேலென்று மேற்றிசையில் மறைந்தான். இவ்விதம்வந்த மாலை என்று மாலைப்பொழுது வருணிக்கப்படுகிறது. மத்தியானம் இரண்டுமணி முதல் உள்ள எற்பாடு வருணிக்கப்படவில்லை.

இனி அவர்கள் இரண்டாவது எடுத்துக்காட்டிய "நெடுவேண் மார்பின்" என்னும் அகப்பாட்டையே நச்சினார்க்கினியரும் தமது தொல்காப்பிய உரையிலே நெய்தலில் எற்பாடு வந்ததற்கு எடுத்துக் காட்டுகிறார். இதிலே,

"நெடுவேண் மார்பி னாரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்தும்
பைங்காற் கொக்கி னிரைபறை யுகப்ப
வெல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு"

என்றது, 'வெள்ளைவெளேலென்ற கொக்கு நிரையாகப் பறப்பது ஸ்ரீசுப்பிரமணியசுவாமியின் மார்பிலிட்ட ஆரம்போலிருக்கிறது' என்றும், 'சூரியன் பகற்பொழுதை மெல்லமெல்ல நீக்கி மேற்றிசையில்



அத்தமயகிரியை அடைந்தான்' என்றும் மாலைநேரத்தை வருணித்ததன்றி அவர்களது நடுப்பகலுக்குப்பின் பத்துநாழிகையுள்ள எற்பாட்டை வருணித்ததாகாது.

"ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே
யெல்லியும், பூவீ கொடியிற் புலம்படைந் தன்றே
வாவலும் வயின்றொறும் பறக்கும் சேவலும்
நகைவாய்க் கொளீஇ நகுதொறும் விளிக்கும்
.... .... .... .... .... ....
.... .... .... .... .... ....
பாரரை வேம்பின் படுசினை யிருந்த
குராஅற் கூகையு மிராஅ விசைக்கும்"

என்னும் நற்றிணைச்செய்யுளில் மாலையும் இரவும் வந்தது. நற்றிணை உரையாசிரியரும் இச்செய்யுட்கொளுவுக் கெழுதும் வியாக்கியானத்திலே "மாலையம்பொழுதும் வந்தது, அதன்மேல் இரவும் வந்திருந்தது." என்றே யெழுதியிருக்கிறார்கள். ஆகவே, நெய்தற்கு எற்பாடுவந்தது என்னும் புதுக்கொள்கையை நிலைநிறுத்தவந்த இந்த மூன்று நெய்தற்றிணைப்பாட்டிலும் மாலைப்பொழுதேவந்தது. "வெஞ்சுடர்வெப்பந்தீரத் தண்ணறுஞ்சோலை தாழ்ந்துநீழற்செய்யும்" என்றமாதிரி வருணனை இங்கு வரவில்லை. தப்பித்தவறியேனும் இது சான்றோர்கள் பாடிய நெய்தற்றிணைச்செய்யுட்களில் எற்பாட்டுக்குவந்ததாகவும் தெரியவில்லை. எற்பாடு என்னும் பொழுது மாலைப்பொழுதின் வேறாக ஒன்று இல்லை. அது அந்தியென்னும் சொல்லைப்போலக் காலையையும் மாலையையும் உணர்த்தும் ஒரு சொல்லே.

இனித் தொழில்பற்றியும் எற்பாடே நெய்தற்றிணைக்குரியதென்று காட்டவந்தவர்கள் "பரதவர்கள் மீன்வேட்டையாடற்குரியகாலம் பெரும்பாலும் எற்பாடென்பதை * "நெடுங்கயிறுவலந்த.... .... .... துறை"

* "நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்கள்
இளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
... ... ... ... ...
இரக்தோர் வறங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ"

என்பதனாலும் அறிந்துகொள்க" என்கிறார்கள். இவ்வகப்பாட்டு "காலையிற் கடலுக்குச் சென்ற பரதவர்கள் துள்ளித்திரியும் செல்வத்தை வாரி வந்து மாலையில் தங்களுக்குள் பங்கிட்டுவிற்று அந்த மணல்மேட்டினிலேயே படுத்து உறங்கிவிட்டார்கள்" என்றதன்றி எற்பாட்டில் மீன் வேட்டையாடப்போனார்களென்று சொல்லவில்லை.

நிற்க, "எற்பாடு நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்திலே வரும் 'எற்பாடு' "நாள்வெயிற்காலையே யாம்" என்றும் "படுதல்" உண்டாதல் என்னும் பொருட்டு என்றம் தம் நுண்ணறிவின் மாட்சியால் சுவாமிகள் அருளியது இரண்டும் இரண்டும் நான்கு என்பதுபோல மறுக்கப்படாத உண்மையாகும்.

ஒரு காதலிக்கு இரவெல்லாம் அவள் கண்ணில்தான் விடிந்தது. சூரியோதயமானதும் அரோசிக்குது பால், தயிரன்னம் உண்ணாமல் எழுந்துவந்தாள். வெளியிலே கம்பீரமாக நீலக்கடல் விளங்குகிறது. கழியில் நெய்தல் கண்ணைக்கவரும்படி எழிலூறி மலர்ந்திருக்கிறது. பறவைகளுக்குத்தான் என்ன ஓயில்? அவை ஜோடிஜோடியாகக் கூடிக் களிக்கின்றன. அவளுக்குப் பொறுக்கமுடியவில்லை. புலம்புகிறாள். இனி வீட்டிலிருந்தாலும் வாசலிற் கிளியிருக்கிறது. தோட்டத்திற் குயிலோசையிருக்கிறது. படுக்கையறையில் மதியும் அவன் காதலி உரோகிணியும் உலாவும் சித்திரம் கட்டிலின் மேற்கட்டியில் விளங்குகிறது. அவள் உயிர்துடித்துப் புலம்புவாள். இதுதான் இயற்கையல்லது, இரவு தூக்கமில்லையென்று படுக்கையை உதறிவிரித்துக் கும்பகர்ணோபாசனைசெய்துவிட்டு மாலைவந்ததும் இரங்கினாள் என்று சொல்வது உசிதமல்ல.

பின்பகல் வீட்டிலுள்ளவர்களெல்லாம் மல்லுக்கட்டச் சிறிது உண்ட தலைவி அந்நேரத்தை ஒருசமயம் – பாட்டிகள் புராணம் படிக்கக் கேட்டுக்கொண்டிருக்கலாம் அல்லது தோழிக்காக அம்மானை, கழற்சி ஆடலாம். அதனாலேயே சுவாமிகள் "பின்பகல் .... .... .... விதிக்கப்படும் கருமம் ஒன்றற்கும் உரித்தன்மையின்" என்கிறார்கள். இனி, மாலைப்பொழுதைக் கண்டதும் தலைவி கல்மாதிரி இருப்பாள் என்று சுவாமிகள் சொல்லவில்லை. தொல்காப்பியனார் இரங்குதற்கு விதித்தபொழுது 'காலை' என்பதே அவர்கள் முடிபு.



நிற்க, நெய்தற்றிணைக்கே உரிய காலை வந்த சங்கத்துச்சான்றோர் செய்யுட்களும், பிற சான்றோர்செய்யுட்களும் பல. அவற்றுள், சிலவற்றை இங் கெடுத்துக்காட்டுகிறோம்.

'பின்னுவிட நெறித்த' என்னும் (150) அகப்பாட்டிலே,

"வாட்சுறா வழங்கும் வளைமேய் பெருந்துறைக்
கனைத்த நெய்தற் கண்போன் மாமலர்
நனைத்த செருந்திப் போதுவாய் அவிழ
மாலை மணியிதழ் கூம்பக், காலைக்
கண்ணறு காவியோடு கண்ணேன மலருங்
கழியுங் கானலுங் காண்டொறும் பலபுலந்து
வாரார் கொல்லெனப் பருவருந்
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே"

என்பதால் நெய்தலிற் காலைவந்தது. இன்னும் இப்பாட்டிலே தோழி காலையில் மலரும் நெய்தல், செருந்தி, குவளைப்பூக்களையுங்கூறி அக்காலை நேரத்திலே தலைவி கழியுங் கானலுங் காணுந்தோறும் வருந்திப் புலம்புவாள் என்றதும் நெய்தற்குக் காலையே உரித்தென்பதை விளக்கிவிடுகிறது. "கானலுங்கழறாது" என்னும் 170-ஆம் அகப்பாட்டும் நெய்தலிற் காலை வந்ததைக் காட்டும்.

நெய்தற்கலியிலே (123) தலைவி காலைநேரத்திலே மிகவருந்தித் தன் நெஞ்சைப்பார்த்து,

"கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினோ டிருந்தும்பி யிசைபூத
ஒருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டருப்பொருள் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கடல் துயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்
.... ... ... .... ...
எல்லையும் இரவுந் துயிறுறந்து பல்லூ
ழருப்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி போதம்போற் றடுமாறி
வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே".

என்றுகூறிப் புலம்புகிறாள். கடல் சாந்தமாக இருப்பது கிழக்கு வெளுக்கும் நேரமாகும். "பெருங்கடன் முழங்க...........புலம்பொடு வந்த புன்கண்மாலை" என்பதால், மாலையிற் கடல் மிகுதியாகவொலிக்கும். உதயத்திற் கடல் சாந்தமாக இருப்பதினாலேதான் செம்படவர்களும் பெரும்பாலும் அந்நேரத்தில் மீன்பிடிக்கச் செல்லுகிறார்கள். கவியரசி சரோஜனிதேவியும் "காமாண்டல் பிஷர்ஸ்" என்னும் கவியில் *இரவெல்லாம் அழுத குழந்தை கிழக்குவெளுக்க உறங்குவதுபோல உதயமகளின் கையிலே காற்று நித்திரைசெய்கிறது" என்கிறார்கள். அதனாலேயே தலைவி "பெருங்கடல்" துயில்கொள்ளும் வண்டிமிர்நறுங் கானல் என்கிறாள். இப்பாட்டிலே தலைவி "நெஞ்சை நோய்செய்தவனிடத்தே பகலும் இரவும் துயிலாது கழியிலே கடற்றிரை போவதும் வருவதுமா இருந்தாற்போலே நீயும் போவதும் வருவதுமாய் வருந்தினாய்" என்று புலம்புகிறது சுவாமிகள்கூறுவதைக் கல்லிலெழுதிய எழுத்தாக்கிவிடுகிறது.

146-ஆம் நெய்தற்கலியிலே அப்பொழுதுதான் உதித்துவந்த சூரியனைப்பார்த்து ஒருதலைவி "நான் என் கணவனைக்காணேன். நீயோ கடல் சூழ்ந்த இடமெல்லாம் சுற்றப்போகிறாய். அவனைத்தேடி" என்றாளாம்.

> "....     ....     ....     ....     .... அவனைத்
> திரைதரு முந்நீர் வளாக மெல்லாம்
> நிரைதரு ஞாயிற்றை நாடென்றேன்"

என்று வருகிறது. இதிற் காலைவந்தது.

குறுந்தொகையிலே, "பாசடை நிவந்த கணைக்காலெய்தல், இனமீனிருங்கழி யோத மல்குதொறுங், கயமூழ்கு மகளிர் கண்ணின் மாலும்" (9) என்பதால் நெய்தலிற் காலைவந்தது.

> "சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
> ....     ....     ....     ....     ....
> விழவுக்களங் கமழும் உரவுநீர்ச் சேர்ப்பு" (நற்றிணை 19)

என இரவிலே பூத்த தாழை காலையிலே கடற்றெய்வத்தின்பொருட்டுத் திருவிழாத்தொடங்கும் களமெல்லாம் மணக்குமென்றதாற் காலைவந்தது.

*"The wind lies asleep in the arms of the down like a child that has cried all night."



வருணதேவதையைக்குறித்துச் செய்யும் இந்த விழா பூர்ணிமையன்று காலையில்தான் நடக்குமென்பதைச் "சினைச்சுறவின் கோடுநட்டு, மனைச் சேர்த்திய வல்லணங்கினான், மடற்றாழை மலர்மலைந்தும், பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும், புன்றலை யிரும்பாதவர், பைந்தழைமாமகளிரொடு, பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா, துவவு மடிதந்துண்டாடியும்" என்னும் பட்டினப்பாலையா லறியலாம்.

நற்றிணை 275-ஆம் பாட்டிலே தலைவி "மென்மெலத் தெறுகதிர் இன்றுயிற் பசுவாய் திறக்கும் பேதைநெய்தல்" எனச் சூரியனைக் கண்டதும் துயில்விட்டு வாய்திறக்கும் பேதைநெய்தல் என்பதாற் காலைவந்தது.

அந்நூல் 283-ஆம் செய்யுளிலே "பெண்கள் கழிக்குப்போய் நெய்தற் பூக்களைப் பறித்துவந்து வீட்டுமுற்றத்திலே கோலமிட்டுப் பூவைக்கிறார்கள்" என்றும், "சூரியன் கரிய கடல்விளிம்பிலே தோன்றினான்; அவனினும் வாய்மைசான்ற நின்சொல்" என்றும் தலைவனைப்பார்த்துத் தோழி சொல்வதால் நெய்தலிற் காலைவந்தது.

சுவாமிகள், "குமரியிருட்டைப் படச்சாடி மாதவர் குலவுகிரணச் சுவையுணவினை யுணத்தனி குறுகிய பொற்சக்கரச்சேவல்" என்பதால் சக்ரவாளங்கள் காலையில் எழும் சூரியனது கிரணங்களை உண்ணும் என்பதாயிற்று. தேவாரத்திலே ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள்,

> "சக்கரவா ளத்திளம் பேடைகாள் சேவல்காள்
> அக்கரமங் கள்செய்யும் அடிகளா ரூரர்க்கு
> வக்ரமில் லாமையும் வினைகள்நில் லாமையும்
> உக்ரமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே"

என்பதால் நெய்தற்குக் காலையே உரியதென்பதாயிற்று.

இனி இவ்விதம் நெய்தலுக்குக் காலைமட்டும் வரவேண்டுமேயன்றி மாலையும் நண்பகலும், நடுயாமமும் வரக் காரணம் என்னவெனில் அதற்குக் காரணமிருக்கிறது. ஆசிரியர் தொல்காப்பியனார் "உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே" என்று ஆணை தருகிறார். அதனால் நெய்தலுக்கு மாலையும், நண்பகலும் நடுயாமமும் மயங்கிவந்தன. நச்சினார்க்கினியரும் "வெல்புகழ் மன்னவன்" என்னும் நெய்தற்கலியுரையுள் நெய்தலில் மாலை மயங்கியதென்றே சொல்லுகிறார்.

நெய்தலில் மாலை மயங்கியதென்று நச்சினார்க்கினியர் கூறவும் அதனைமறுத்து ஐயரவர்கள் "எற்பாட்டையும் மாலையுளடக்கினாரும் உளர். பொழுதுபடுதலைச் சார்ந்த மாலைக்காலமே மிகுதியும் இரங்குதலைத் தருதலின்" என்கிறார்கள். ஒன்றில் ஒன்று அடங்கியதென்றதற்கு அவர்கள் கூறிய காரணங்கள் முன் மறுக்கப்பட்டுவிட்டனவாகையால் இங்கு நச்சினார்க்கினியர்கூறியதே சரியென்று ஏற்பட்டுவிடுகிறது.

நாம் இதுவரையும் ஆராய்ந்ததில் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம் 'வைகுறு விடியலே'. ஐயரவர்கள் வைகறை விடியல் என்று கூறிச்செல்வது தவறு என்பதும், இரவு நான்குயாமமாக வகுக்கப்படுவதல்லது மூன்றுயாமமாக வகுக்கப்படாதென்பதும், ஆறு காலபூசை யென்பதுகொண்டு சிறுபொழுது ஆறு என்பதை நிச்சயிக்கமுடியவில்லை யென்பதும், நச்சினார்க்கினியர் சொல்வதுபோலச் சிறுபொழுதைப் பிரித்தால் இரவு பத்துமணிவரை மாலை என்று ஏற்படுவதால் அது பொருத்தமில்லை என்பதும், தொல்காப்பியச் சூத்திரத்தில் வந்த வைகுறுவிடியல் உம்மைத்தொகையும் பண்புத்தொகையுமல்ல, வினைத்தொகையே யென்பதும், வைகறையும் விடியலும் ஒருபொருட்சொற்களேயென்பதும், நாள்வெயிற்காலையிற் கூடல் இல்லை என்பதும், மருதத்துக்கு வைகறை வந்ததன்றிக் காலை வாவில்லை என்பதும், நக்கீரர் மருதத்துக்கு வைகறைப்பொழுதல்லாமற் காலைப்பொழுது கொள்ளவில்லை என்பதும், எற்பாடு என்னும் சொல் காலை மாலைகளை உணர்த்துமாறனும் "எற்பாடு நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்" என்றவிடத்துக் காலைப்பொழுதையே உணர்த்துமென்பதும், அது பின்பகலை உணர்த்தாதென்பதும், நெய்தலுக்குரிய பொழுது காலை என்பதும், நெய்தலில் மாலைவந்தது மயக்கமென்பதும், தெளிவாகிவிட்டன ஆகவே இந்த ஆராய்ச்சி ஸ்ரீ சிவஞானசுவாமிகள் சிறுபொழுதுஐந்து என்றும், நெய்தலுக்குரிய பொழுது காலை என்றும் கூறியதை வலியுறுத்தியதல்லாமல் பூர்வபக்கமாயொழிந்த நச்சினார்க்கினியர் இளம்பூரணர் உரையையேனும், ஐயரவர்கள் சொல்வதையேனும் சிறிதும் ஆதரிக்கவில்லை.

பண்டிதர் சி. வீரபாகுப்பிள்ளை,
அர்ச்ய சிஷ்ட சவேரியார் கலாசாலை, பாளையங்கோட்டை,

---

# ஓர் ஐயம்.

செந்தமிழ்த் தொகுதி உசு பகுதி ஒன்றில், தாம் எழுதி வெளியிட்ட புறநானூற்றுக்குறிப்பிலே இலக்கணம்வல்லவராய்விளங்கும், S. சுப்பிரமணியசாஸ்திரியாரவர்கள் M.A, Ph. D. L. T. "ஏ ஔ (ஐ ஔ) ஏ. ஔ. என்பது, மூன்று மாத்திரைகொண்ட தனி ஒலி எழுத்தென்பது வீரசோழிய ஆசிரியர் நன்னூலாசிரியர் முதலானோர்கருத்து. தொல்காப்பியர்கருத்தோ அவ்வாறின்றி ஏ என்பதும் ஔ என்பதும் தனியொலி எழுத்துக்கள் என்பது" என்றுகூறி, "தொல்காப்பியர் கூறிய சந்தியில்வரும் எழுத்துப்பேறுகளை நோக்குமிடத்தும், "நீட்டம்வேண்டின்..............என்மனார் புலவர்" என்னுஞ் சூத்திரத்தை நோக்குமிடத்தும், அதுவே அவர்கருத்து என்பது துணிபு" என்றுங் கூறுகின்றார்கள். நான் நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் கூறாததும் சாஸ்திரியார் கூறியதுமாய புதுக்கருத்தை நோக்கியபொழுது, ஒருபோது அவர்கள்கருத்துப் பொருத்தமாயும் இருக்குமோ? எனத் தொல்காப்பியர்கூறிய அளபெடைக்குரிய சூத்திரங்கள் யாவற்றையும் நன்கு ஆராய்ந்துபார்த்தேன். அவற்றுள் சிலசூத்திரங்கள் அவர்கள்கருத்துக்கு மாறானகருத்துடையனபோலத் தோன்றுகின்றன. அச்சூத்திரங்கள்,

"தெளிவினேயும் சிறப்பினேவும், அளபி னெடுத்த இசைய என்ப."

"ஈரளபிசைக்கும் இறுதியிலுயிரே, ஆயியல்நிலையும்காலத்தானும்,
அளபெடைநிலையுங்காலத்தானு, மளபெடையின்றித்தான்வருகாலையும்"

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்" என்பன

இன்னும், நீட்டம்வேண்டின்..........என்மனார்புலவர்" என்பதில், 'நீட்டம்' என்ற சொல்லும், 'உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்' என்பதில் 'நீட்டம்' என்ற சொல்லும், அதற்குத் தடையாயுள்ளன. அன்றியும், அளபெடை எழுத்து 'ஆஅ' என்பவற்றில் அகரமாயின் ஆகாரமும் அகரமும் பிளந்திசைப்பதன்றிச் சேர்ந்தொலியா என்பது பிரத்தியட்சம். சேர்ந்தொலிக்கவேண்டாவெனின் மாபுராணச்செய்யுளில் செய்யுட்கெடின் ஒற்றையுண்டாக்கு என்று கூறியவாறு, உண்டாக்கப்பட்டதோரெழுத்தாய் 'எழுத்தேனை' யாகுமன்றி அளபெடையாகாவாகின்றது. மாபுராணகாரர் உண்டாக்கிய ஒற்று வேறு, ஒற்றளபெடை வேறு என்னுங் கருத்து யாதோ? ஆதலால் இவற்றை நோக்குபோது இவையுந் தடையாகின்றன. குறில் அளபெடையாய்வருங்காலத்து—

குற்றெழுத்து நெட்டெழுத்தாய் நீண்டு அளபெடுக்குமிடத்து—'மிகும், மிகூம், மிகூஉம்' என வருகின்றது. இவ்வளபெடையில் குறில் நெடிலாய் நீளுதல் போல, நெடில் நீண்டு அளபெடையாய் வாராதா? குறில் அளபெடுத்துவருமிடத்துச் சாத்திரியார் கருத்தின்படி 'மிகுஉம்' என்றல்லவா வரவேண்டும்? அப்படி வருதல் வழக்கில்லையே? நெடிலாய்நீளுங் குறில், இன்னும் ஒருமாத்திரை நீண்டுவாராதா? 'அளபெடை மிகூம் இகர விறுபெயர்' என்பதில், 'அளபெடையில் மிக்குவரும் இகர ஈற்றுப் பெயர்' என்பதனால் அளபெடையில் ஒருஇகரம் மிக்குவருதல் எனப் பொருள்கொண்டு, எழுத்துப்பேறுகளும் இப்படி அளபெடையில்மிக்கு வருவன என்று பொருள்கொள்ளலாகாதா? மிகுதல்—மாத்திரை மிகுதல்—அதிகமாதல். மாத்திரை என்றால் ஆண்டுக் கடலொலிபோலத் தனிஇசையுமல்ல. எழுத்தோசையாயே நீளும். அவ்வவ்வினமாய குற்றெழுத்துக்களாக நெட்டெழுத்துக்கள் நீள்வதேயாம். இதனை, "குற்றுயிரளபினீறாம்" என்பதற்குச் சிவஞான முனிவர், "ஒலிவடிவில் ஈறாம்" என்று உரைகூறியதனால் உணரலாகாதா? தொல்காப்பியரும் அவ்வவ் வினஎழுத்துக்கள் அளபெடையில் இசைநிறைக்கும் என்றது அதிகமாக ஒவ்வோர் குற்றெழுத்து நெட்டெழுத்தின்பின் அளபெடுத்தலால் வந்துநின்று இசையைநிறைக்கும் என்ற கருத்தாற் கூறினர் என்று கொள்ளலாகாதா?. அளபெடை அசைநிலையாதலும் மாத்திரை வகையாலன்றி எழுத்துவகையாலல்ல; எழுத்து மாத்திரையைக்காட்ட வந்த எழுத்து என்பது பிரத்தியட்சமாதல், "மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை—யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்" என்பதாலும் ஐகாரத்தை "வைகலும் வைகல்" என்பதிற்போலச் சில இடங்களில் நெட்டெழுத்தாகவும், சில இடங்களிற் குற்றெழுத்தாகவும் கொள்ளப்படுதலாலும் அறியப்படுகின்றது. அயலெழுத்துக்களோடு சேர்ந்து அளபெடைஎழுத்துப் பொருடாராமையின் எழுத்தாகக் கொள்ளாது மாத்திரையளவாகவே கொள்ளப்படுகின்றது. அசைநிலையாதல்பற்றி எழுத்தாகக்கொள்ளவேண்டும் என்னும் நியதியின்று. ஆதலால், இவற்றையெல்லாம் நோக்கித் தமிழுலகிற்குப் பயன்படுமாறு அச்சூத்திரங்களுக்கு விரிந்து பொருள்கூறுது, சொற்களுக்கேற்பப் பொருளுரைத்து சாஸ்திரியவர்களேனும் ஏனைய தமிழ்ப்புலவர்களேனும் இவ்வையத்தைநீக்குவது பேருபகாரமாகும்.

ஆ. சுப்பிரமணியபிள்ளை,
புத்தூர்; யாழ்ப்பாணம்.

உ
கணபதி துணை.

# கபிலவனார் சரித்திரம்.

மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்
ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A. எழுதியது.

[கரு௮-ம் பக்கத்தொடர்ச்சி].

## அதிகாரம் III.

### இயற்கையின் வெற்றி.

இவ்வுலகில் ஒவ்வொருபொருளுக்கும் இயற்கைக்குணம் செயற்கைக்குணம் என இருவகைக்குணம் உண்டு. இயற்கைக்குணம் ஒருபொருளில் தானாகவே அமைந்துகிடப்பதாகும். செயற்கைக்குணம் அப்பொருளுக்குப் புறம்பாகவுள்ள பற்பல நிமித்தங்களான் விளைவதாகும். செய்வினையால் ஒருபொருளில் இயற்கைக்குணத்தை மிகுதிப்படுத்தவோ அல்லது குறைப்படுத்தவோ கூடுமேயன்றி அக்குணத்தை முழுதும் அழித்துவிடுதல் இயலாது. இயற்கைக்குணம் பலாத்காரத்தினுற்றான் மாற்றப்படுவதாகும். பலாத்காரம் சற்றுநீங்கியவழியும் இயற்கையானது பொருளைத் தன்வயமாக்குதற்கு முயலும். பூமியைநோக்கி விழ்தல் எல்லாவஸ்துக்களுக்கும் இயற்கையாக வமைந்தகுணம். ஒரு கல்லை ஒரு கயிற்றுநுனியிற் கட்டி உயரத்திற் றூங்கிநிற்குங்கால் அக்கயிற்றின் பலாத்காரத்தினுல் அக்கல்லானது மேழ்விழாது நிற்கின்றது. நூல் அற்றதேயாயின் உடனே கல்லானது இயற்கைவழியதாகிக் கீழே விழ்ந்துசெல்லும். இயற்கையினது ஆக்கம் ஜடப்பொருளுக்கு இருப்பதைக்காட்டிலும் உயிர்ப்பொருளுக்குப் பன்மடங்கு அதிகமாகும். செடி கொடிகள் நிழலில் வைக்கப்பெற்றால் அவை சூரியவெளிச்சமுள்ள இடத்தைநோக்கி வளருகின்றன. ஓரறையில் ஒரு பட்பாண்டத்தில்

வளரும் புஷ்பக்கொடியானது பாண்டத்தின் குறுகியஇடத்தில் வேர்கள் விடுவதற்குப் போதுமான இடமில்லாமலும் சூரியவெளிச்சமில்லாமலும் தன்னியற்கை குன்றி வாடும். ஆயினும், தன்னியற்கையானே தன்மீதியற்றப்பட்ட செயற்கைக்கட்டுப்பாடுகளை அழித்துவிட முயலும். அம்முயற்சியில் வெற்றியடைந்தாலன்றி அது பிழைத்திராது. மட்பாண்டத்தைத் துளைத்தாவது அதன்வேர்கள் வெளிப்படமுயலும். அந்த அறையில் யாதானும் ஓர் பலகணியிருப்பின் அதனை நோக்கியே அக்கொடியானது படர்ந்துசென்று பலகணிவழியே வெளியேறுதற்கு முயலும். இம்முயற்சிகள் பயன்பெறாவிடின் கொடியானது இறந்துபடும். இதன் இயல்புநோக்கி இக்கொடியைப் பாண்டத்தினின்றும் நீக்கிக் காற்றும் வெளிச்சமும் நிறைந்ததோரிடத்திற் பதித்துவைத்தாற் கொடி எவ்வளவு பொலிவுடன் வளர்ந்து புஷ்பிக்கும்!

இவ்விதமாகக் கல்முதலிய அசேதனப்பொருள்களின் இயற்கை இவ்வளவு வன்மையுடையதென்றால், சேதன—அசேதனப்பொருள்களுக்கெல்லாம் தலைவனாகிய மனிதனின் இயற்கைவலி பன்மடங்கதிகமன்றோ! கலீலவனாருக்கு ஏற்ற கல்வி கணிதமும் அது சார்ந்த இயற்கைப் பொருளாராய்ச்சியுமே. அவருடைய இயல்புக்குத் தகுந்தனவாகிய இவற்றைச் சிறிதும் கற்பியாது அவர் தகப்பனார் காலத்தைக் கழித்துவிட்டார். தந்தை சொற்படி தநயனும் தமதியல்புக்குப் புறம்பாகிய வைத்தியசாத்திரத்தைப் பயின்றுவந்தார். அவருக்கு இயற்கையாயமைந்த வழியினில் ஏற்ற கல்வி கேள்வியின்றி அவரது ஆழ்ந்ததோர் இதயப்பகுதியில் ஒரு வேட்கையானது அவரறியாமலே வளர்ந்துகொண்டுவந்தது. பெண்டுலத்தினது ஆராய்ச்சிவழிப்படவே மறைந்துநின்ற வேட்கை வெளிப்பட்டது. ஓர் புழுக்கறையில் மூச்சுவிடமுடியாது திக்குமுக்காடுவோனொருவன் ஓர் சாளரத்தினை அடைந்தானாயின் எவ்வாறு இன்புறுவன்! அவன் அவ்வறையினின்று விடுதலைபெற்று விரிந்த காற்றுவெளியில் வருங்கால் உயிர்பெற்றவனேபோன்று மகிழ்ந்து பூரிப்பானன்றே! கலீலவர்க்கும் தம்மியற்கைக்குப் பொருந்தாக் கல்விக்



கட்டுப்பாடுகளை நீக்கி அவர்மனதுக்கினிய அறிவுவெள்ளத்தில் ஆழ்ந்து திளைக்கும் காலம் வந்துவிட்டது. இனி அவ்வரலாற்றைக் கூறுவாம்.

அக்காலத்தில் பீசாநகர் ஒரு கடற்கரைநகரமாயிருந்தது. அங்கு டஸ்கனியரசர் கோடைநாட்களை இனிது கழிக்கவேண்டித் தம் பரிவாரங்களுடன் விஜயஞ்செய்திருந்தார். அவர் பரிவாரத்தில் ஆஸ்தில்லியோ-ரிச்சி என்னும் பிரசித்திபெற்ற கணிதவித்வானும் வந்துசேர்ந்தார். டஸ்கனியரசரது அரண்மனையில் தொண்டுபுரியும் சிறுவர்கட்குக் கல்விபயிற்றுவித்தல்வேண்டி வருவிக்கப்பட்ட ஆசிரியர்களில் ரிச்சியும் ஒருவராவர். ஆஸ்தில்லியோ-ரிச்சியார் கலீலவர்குடும்பத்திற்குத் தொன்றுதொட்டுவந்த நண்பரும் உறவினருமாவர். நம் கலீலவரும் இவரிடம் அடிக்கடி சென்று இனிது உரையாடிவருவதானார். இவ்விதமாக ஒருநாள் அரண்மனைக்குச்சென்றபொழுது, ரிச்சியார் தம்முடைய மாணவர்களுடன் ஓரறையிற் குழுமி, யூக்லிட் எனப்படுவோரியற்றிய க்ஷேத்ரகணிதத்தை வெகு தெளிவாகவும் இனிமையாகவும் போதித்துக்கொண்டிருந்தார். வாயிற்கதவு அடைத்திருந்தது. கலீலவர் உற்றுக் கேட்டார். இன்பவெள்ளமேபோன்று ரிச்சியாருடைய சொற்பொழிவு கலீலவரின் செவிகளை நிரப்பவே அவர் தம்முடைய கண்ணைக் கதவில் திறவுகோலிடும் துவாரத்தில்வைத்து உள்ளே நிகழ்வனவற்றைக் கண்கொட்டாமல் நோக்கினார். ரிச்சியார் கணிதப்படங்களைக் கரும்பலகையில் வரைந்து கணக்குகளை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கிக்காட்டிக்கொண்டு சென்றார். கலீலவரும் ஒவ்வொருவிடயத்தையும் அமுதமேபோன்று கண்ணாலும் செவியாலும் மனத்தாலும் அருந்தியருந்தி மெய்மறந்தார். பாடம் முடியவும் பள்ளி கலைந்தது. கலீலவனார் ரிச்சியாருடன் அவர் இருக்கைக்குச்சென்று தமக்கும் கணிதத்தைக் கற்பிக்கவேண்டுமென்று மன்றாடினார். வயோதிகரான அவ்வாசிரியர் இவரது அடங்காத வேட்கையைக்கண்டு வியப்புற்று அவ் வேண்டுகோளுக்கு மனமுவந்து இணங்கினார்.

தினந்தோறும் கலீலவனார் தமது தந்தைக்குத் தெரியாமல் ரிச்சியாரிடம் சென்று கணிதம் பயின்றுவருவதானார். இவரது கரந்தநடை வின்சென்லோவுக்குத் தெரியவரவே அவரும் தம் மகனைக் கண்டிக்கலானார். அவரது கல்வியொழுகலாற்றையும் எச்சரிக்கையாக நிபந்தித்தார். தனயனது களவொழுக்கத்தை நீக்குதற்குத் தந்தை செய்த முயற்சியானது பலகூறுனெரியும் சுடரை எண்ணெய் சொரிந்து அவிப்பதுபோல்வதாயிற்று. தந்தைமுன்பாகப் பகிரங்கமாகக் கலீலவர் படிப்பது வைத்தியநூல்களும் அவரது தலைமறைந்தபோதெல்லாம் ஒளித்துப்பயில்வது கணிதநூல்களுமாக, சிறிதுகாலத்தில் கலீலவனார் கணிதத்தில் முற்றத்தேர்ந்தார். அக்காலத்தில் முக்கியமாகவழங்கிவந்த கணிதநூல்கள் யூக்லிட் என்ற எகிப்தியரும், ஆர்க்கிமிடிஸ் என்ற கிரேக்கரும் இயற்றிய இரண்டுநூல்களுமேயாம். இவ்விரண்டினையும் கலீலவர் எளிதிற் கற்றுமுடித்தார்.

தந்தையார் மகனைத் திருத்துவது அசாத்தியமென்றே அம்முயற்சியை விடுத்தார். கலீலவரது கணிதப்பயிற்சி ஆக்கம்பெறவே அவரது வைத்தியப்படிப்புக் குன்றியது. தான் கல்லூரியில் இதுகாறும் பயின்றுவந்த வைத்திய வகுப்பிலிருந்து கணிதவகுப்புக்குத் தன்னை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று கலீலவர் விரும்பினார். ஈசன் தன் மைந்தன் தலையில் எழுதிவைத்தது கணிதம்தான் என்று இரங்கிய தந்தையும் அதற்கு ஒருவாறு இசைந்தார். சிறிதுகாலத்தில் அவரது குடும்பமானது மிக்க வறுமையில் ஆழ்ந்தது. ஆகவே, கலீலவருக்குக் கல்லூரிப்படிப்பும் இயலாதுபோயிற்று. எனவே, இருபத்திரண்டாவது வயதில் அவர் யூனிவர்ஸிடிப் பட்டத்தையும் பெறாது படிப்பை விடுத்துத் தமது குடும்பத்துக்கு வேண்டிய ஜீவனோபாயத்தைத் தேடவேண்டியதாயிற்று.

---



## அதிகாரம் IV.

### கலீலவர்க்கும் ஆசிரியர்கட்கும் நேர்ந்த போராட்டம்.

கி. பி. 1586-வது வருடமுதல் 1590-வது வருடம்வரை கலீலவர் பல்வேறு உத்தியோகங்களிலமர்ந்து பொருளீட்டித் தம் தந்தையாருக்கு உதவிபுரிந்துவந்தார். தமக்கு வேலையொழிந்தநேரமுழுதையும் ஆராய்ச்சியிற் கழித்தார். இந் நான்குவருடகாலமும் பிரகிருதிசாத்திரத்திற்கு மூலப்பகுதியாகிய இயந்திரதத்துவத்தைப் பற்பல பரிசோதனைகளானாராய்ந்து, உயர்ந்த நுட்பங்களை வெளியிட்டுச்செல்லவே, அக்காலத்து அறிவாளர் பலரும், கலீலவரே நிகரற்ற சாத்திரவிற்பன்னரெனக் கருதினார்கள். இவரது பேராற்றலையுணர்ந்த பீசா யூனிவர்ஸிடியாரும் கி. பி. 1590-வது ஆண்டில் கலீலவரைத் தமது கலைக்கழகத்துக் கணித ஆசிரியராக நியமித்தார்கள்.

இனிக் கலீலவர் அந் நான்குவருடகாலத்தில் முடித்த ஆராய்ச்சி விசேடங்களைச் சுருங்கக்கூறி ஆசிரியராயமர்ந்தபின்னர் நேர்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவாம். இவர் கி. பி. 15[illegible]-வது ஆண்டில் திரவவஸ்துக்களின் இயல்புகளை ஆராய்தற்கின்றியமையாத கருவியாகிய நீர்நிலைத்தராசுஒன்றைப் புதிதாக இயற்றினார். 1588-வது வருடத்தில் வஸ்துக்களின் பளு, அவற்றின்வழியே தாக்கும் முறைகளைப் பற்பல பிரத்தியக்ஷ பரிசோதனைகளாலாராய்ந்து ஓர் உயர்ந்த நூலையியற்றி உலகுக்களித்தார். இந்நூலில் அவரது ஆராய்ச்சிகளெல்லாம் மிக நூதனமாகவும் யுக்திபூர்வமாகவும் ஆழ்ந்தபொருள்பயப்பனவாகவும் இருந்ததனால் சாத்திர ஆசிரியர் பலரும் கலீலவரைப் புகழ்ந்து கொண்டாடுவாராயினர். இந்த நூலானது அக்காலத்து ஆசிரியர் வேதமேபோன்று பயின்றுவந்த கிரேக்கக்கிரந்தங்களாகிய "அரிஸ்தாதில்", "ஆர்க்கிமிடிஸ்" ஆகிய இரண்டினையும் பெரிதும் தழுவி, அவரது தத்துவங்களைப் புதியபுதியமுறைகளானாராய்ந்தும், நிரூபித்தும், மறைபொருள்களை விளக்கிக்காட்டியும், சிற்சில இடங்களில் தமது நூதனக்கொள்கைகளைக் கூறியும் போந்தது.

ஆதல்பற்றி அக்காலத்துச் சாத்திர ஆசிரியர் பலரும் கலிலவரை "நவீன ஆர்க்கிமிடிஸ்" எனப் பட்டமளித்துப் புகழ்வதானார்கள். அன்னார்கள் பின்னர் நிகழப்போவனவற்றைக் கனவிலும் கருதினார்களில்லைப்போலும்.

கலிலவனார் உத்தியோகத்திலமர்ந்ததும் பளுவுள்ளவஸ்துக்கள் பூமியின்மீது வீழ்ந்துசேரும் இயல்பினை ஆராய்ந்தார். அரிஸ்தாதிலர் கிரந்தத்திற் கூறப்பட்டுள்ளவற்றில் இவ்விஷயம் ஒன்றாகும். அரிஸ்தாதிலர்கொள்கை யாதெனின், இருவேறுபளுவுள்ள வஸ்துக்களை ஒரே குறிப்பிட்ட உயரத்திலிருந்து கீழே விழும்படி விடுத்தால், அவைகள் தத்தம் பளுவுக்கேற்ற வேகங்களுடன்—அதாவது அதிகப் பளுவுள்ள வஸ்து சற்று சீக்கிரமாகவும் பளுக்குறைந்தவஸ்து சற்றுப் பின்னரும் – பூமியில் வந்துசேரும் என்பதே. இக்கூற்றினைக் கலிலவர் பிரத்தியக்ஷ பரிசோதனையினால் ஆராய்ந்தார். வெவ்வேறு பளுவுள்ள இரு வஸ்துக்களை ஒரே உயரத்திலிருந்துவிடுத்தார். இரண்டும் இணைபிரியாது வீழ்ந்துசென்று ஒரேகணத்திற் பூமியிற் சேர்ந்தன. எனவே கலிலவரது முடிவானது கிரந்தகர்த்தராகிய அரிஸ்தாதிலரின்கூற்றுக்கும் அக்காலத்தவரின் கொள்கைக்கும் முழுதும் மாறாக இருந்தது. கலிலவர்க்கும் அக்காலத்திற் கிரேக்ககிரந்தங்களைப் பின்பற்றிநின்ற பெரும்பான்மையோராகிய ஆசிரியர் முதலியோர்க்கும் நேர்ந்த பகைக்கு இவ்வாராய்ச்சியே முதற்காரணமாயிற்று. இப்பகையின் வரலாறு முழுதும் நமக்குத் தெளிவாகவேண்டின் அக்காலத்துச் சாத்திரவரலாற்றையும் மக்களியல்பினையும் சற்று ஆராய்தல் இன்றியமையாததாகும்.

ஐரோப்பாவில் முதன்முதல் அறிவுநூல்களையியற்றியவர் புராதன கிரேக்கமக்களே. கிரேக்கரிடமிருந்து இத்தாலியாதேசத்தில் உரோமர்களெனப் பெயர்வாய்ந்த லத்தீன்மக்களே அவரது கல்வியைப்பெற்றனர். கிரேக்கதேசத்தின்வழிபேவந்த ஞானவெள்ளமானது இத்தாலியாதேசத்தின்மூலம் ஐரோப்பாமுழுவதும் பரவிச்சென்றது. இதுவே மேனாட்



டுச் சரித்திர ஆசிரியர்களின் கொள்கை. எனவே, கலிலவனார் காலத்தில் வழங்கப்பெற்ற சாத்திரங்களெல்லாம் கிரேக்கர்களின் வழக்கைப் பெரிதும் பின்பற்றிநின்றன. ஸாக்ரடீஸ் என்னும் கிரேக்க அறிஞர் காலத்துக்குமுன்பு சாத்திரங்களெல்லாம் மிகவும் குன்றியிருந்தன. அப்பொழுதுள்ள நூல்களெல்லாம் புராணகதைகளாகவேயிருந்தன. அவற்றில் இயற்கைச்சாத்திரப்பகுதிகள் சிற்சில கூற்றுக்களேயாம். அவையும் பெரும்பான்மையாகப் பிரத்தியக்ஷ அநுபவத்துக்குப் பொருந்தாதனவாயிருந்தன. கி. மு. 5-வது நூற்றாண்டில் அறிஞரான ஸாக்ரடீஸ் தருக்கமுறையைப் பெரிதும் பிரத்யக்ஷ அநுபவத்துடன் கூட்டியே சாத்திரங்களையாராய்ந்து அவற்றில் அசம்பாவிதமானவற்றை அகற்றிச் சென்றார். இப் புதியமுறையானது மதவைராக்கியம்பொருந்திய அக்காலத்துமக்களுக்கு ஸாக்ரடீசின்மீது வெறுப்புண்டாகும்படி செய்தது. அது காரணமாக அக்காலத்து அரசாங்கத்தார் விஷத்தையருந்தும்படி அவருக்கு மரணசிக்ஷைவிதித்தனர். சாத்திரங்களைக் கேவலம் யுக்திக்குக்கூட விஷயமாக்கி ஆராய்தல் தகாது என்ற அக்காலமக்களின்கொள்கையே ஸாக்ரடீஸ் இக்கடுமையானதண்டனையைப் பெற்றதற்குக் காரணம். இவர்காலத்துக்குப்பிறகு இக்கொள்கை சிறிதுசிறிதாக மாறவே சாத்திரங்களின்கூற்றுக்களைச் சபைகளில் வாக்குவாதங்கள்புரிந்து ஆசிரியர்கள் ஆராயத்தலைப்பட்டார்கள். என்றாலும், பிரத்தியக்ஷப்பிரமாணம் மிகவும் இழிந்ததாகவே கருதப்பட்டதனால், பிரத்தியக்ஷ பரிசோதனைகளைக்கொண்டு ஒருவரும் சாத்திரங்களின் கூற்றுக்களை ஆராய்வதே கிடையாது. ஆதலால் ஒவ்வொரு விஷயத்திலும் பலவகைப்பட்ட அருத்தபேதங்கள் வழங்கிவரலாயின. ஒவ்வொருசாராரும் தமது அருத்தத்தையே உண்மையென காட்டுதற்கு முயலுவர். எனவே ஆசிரியர்களது போராட்டம் ஓயாது நடந்துகொண்டிருக்கும். பிரத்தியக்ஷ பரிசோதனையினால் எளிதில் விளங்கக்கூடியதோர் சிறுவிஷயமும் ஆசிரியர்களின் பயனற்ற வாக்குவாதங்களால் பெரிய வைக்கோற்போரிலிட்ட ஊசியேபோலப் புலப்படாது

போகும். இதற்கு உதாரணமாக ஒரு கதை வழங்கிவருகிறது. இதன் வரலாறு "தொட்டியிலிட்டமீன்" என்னும் சித்தாந்தத்தைப்பற்றியதாம். இச் சித்தாந்தம் "ஒரு தொட்டிநிறையத் தண்ணீரை நிரப்பி, அதற்குள்ளே ஒரு உயிருள்ள மச்சத்தைவிடுத்தால் தண்ணீர் தொட்டியிலிருந்து மிகுந்து வழியாததற்குக் காரணமென்னை?" என்பதேயாம். இவ்விஷயத்தில் உண்மைகாண்பது மிகுந்த அறிவுடையார்க்கே இயலுமாம். மச்சத்தின் உடம்பு பஞ்சபூதத்தினலாயபோதும் அதில் நீர்ப்பகுதியே மிகுந்திருத்தலானும், அந்நீரே அதற்கு இன்றியமையாத வாசஸ்தானமானதாலும் நீராகிய பூதமானது மச்சம் நுழைந்ததும் பாத்திரத்தைவிட்டு வெளியேறும் அவசியமேயில்லை; என்று வாதிப்பர் ஒரு சாரார். நீரினது இயல்பு நிரம்பியபாத்திரத்தைவிட்டு வழிந்துசெல்வதேயாதலான், தண்ணீர் பாத்திரத்திலிருந்து வழியத்தான்செய்யும் என்று சாத்திரங்களிலிருந்தும் உரையாசிரியர்கூற்றுக்களிலிருந்தும் மேற்கோள்களைக் காட்டி மறுப்பர் மற்றொரு சாரார். இருவருப்பிலும் கல்விசைவாய்ந்த புலவர் பலரும் கூடுவார்களாம். எவ்விடத்திலும் எக்காலத்திலும் வாக்குவாதத்திற் சிறந்தவனது கூற்றே உண்மையாகக் கருதப்பட்டதனுல் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு உண்மை பலவாறாக இருந்துவந்தது. இவ்விதமாகப் புலவரது போராட்டம் ஓயாது நடந்துபோகவே, ஒருநாள் எழுத்துவாசனையுமறியாத குடியானவனொருவன், மக்கள் எதிர்பாராதவிதமாக அவர்கள் விவாதத்தைத் தீர்த்தான். அவர்முன்னே ஒருதொட்டி நிறையத் தண்ணீரை நிரப்பினுன். அதில் ஒரு உயிருள்ள மீனை விடுத்தான். தண்ணீர் வழிந்தது. இம்முடிவை முன்பு ஆட்சேபித்தவரும் இவ்வண்ணம் செய்து பார்க்கத் தமக்கும் அவ்வாறே நிகழ்ந்தது. அவர்கள் குடியானவனைக் கண்கட்டி வித்தைக்காரன் என்று சொல்வதற்கியலாதுபோயிற்று. உண்மை வெளிப்படவே விவாதங்களும் ஒழிந்தன.

மேற்கூறிய கதை வெறுங் கற்பனையாகவேயிருந்தாலும் இருக்கலாம். ஆனுலும் அக்காலத்துச் சாத்திர ஆராய்ச்சிமுறையை இக்



கதை ஒருவாறாக விளக்குகின்றது. ஸாக்ரடீசுக்குப்பின்னர் கி. மு. 4-வது நூற்றாண்டில்வந்த அரிஸ்தாதிலர் சாத்திரங்களை ஆராய்ந்து நூல்களை இயற்றினுர். இவர் பொதுவாக ஸாக்ரடீஸின்முறையைப் பின்பற்றி இயற்கைச்சாத்திரங்களைப்பற்றிய விஷயங்களைத் தமக்கியன்றவாறு பிரத்தியக்ஷ பரிசோதனைகளான் ஆராய்ந்து வெளியிட்டார். இவருக்குப்பின்னர் அதாவது கி. மு. 3-வது நூற்றாண்டிலிருந்த கிரேக்க ஆசிரியரான ஆர்க்கிமிடிஸ் என்பார் பிரத்தியக்ஷ பரிசோதனுமுறையை அரிஸ்தாதிலரைக்காட்டிலும் அதிகமாகவே உபயோகித்து இயற்கைச் சாத்திர விஷயங்களை ஆராய்ந்து வெகு அழகான தத்துவங்களை வெளியிட்டார். இவர்கட்குப்பின்னர் கி. பி. முதலாவது நூற்றாண்டில் தாலமி என்பார் கணிதத்தையும் வானசாத்திரத்தையும் ஆராய்ந்து அரியநூல்களை இயற்றினுர். அரிஸ்தாதிலர், தாலமி முதலியோருடைய கொள்கைகளை கிறிஸ்துவேதமாகிய பைபிளிலும் கொள்ளப்பட்டன. பிற்றைக் காலங்களில், கிறிஸ்துமதத்தைப்போதித்துவந்த பாதிரிமார்களே பைபிள்வேதத்துடன் இயற்கைச்சாத்திரங்களையும் மக்களுக்குப் போதித்துவந்தார்கள். காலப்போக்கில் இயற்கைச்சாத்திரக் கொள்கைகளும் மதாசாரக்கொள்கைகளும் தலைமயங்கிக் கலந்தன. இந்த நிலைமையிலிருந்த சாத்திரங்களையே கலிலவனுர் தமது யூனிவர்ஸிடியிற்பயின்றூர்.

கலிலவனுர்காலத்தில் மக்களுக்குத்தெரிந்த பௌதிகசாத்திரமெல்லாம் அரிஸ்தாதில், ஆர்க்கிமிடிஸ் முதலிய கிரேக்க ஆசிரியர்களியற்றிய கிரந்தங்களில் ஆங்காங்கே விரவிக்கிடந்த சிற்சில சூத்திரங்களும், அவற்றைப்பற்றிப் பிற்காலத்து உரையாசிரியர்கள் எழுதிப்போந்த உரைகளுமேயாம். இவர்களது நூல்கள் வேதத்துக்குச் சமமாகவே கருதப்பட்டிருந்தன. அந்தக்கிரந்தங்களை மாசற்ற உண்மையிலும் அழகிலும் நிரம்பினவாகவே மக்கள் கருதினுர்கள். எனவே, ஒருவரும் இப்பண்டைநூல்களின் கூற்றுக்களைப் பிரத்தியக்ஷபூர்வமாகப் பரீக்ஷிக்கத் துணியமாட்டார்கள். இவ்விதமாகப் பரீக்ஷிக்கக் கருதுதலுங் கூட, மிகத்தொன்மைவாய்ந்த சான்றோரின் பொய்யாமொழியிலும்,

வழிவழியே போந்த குருபரம்பரையா ரளித்துவந்தஉரைமொழிகளிலும் குற்றங்காண்பதான பெரும்பாதகமாகக் கருதப்படும். அவ்வண்ணம் அரிஸ்தாதிலர் முதலியோருடைய கூற்றுக்களை ஆக்ஷேபிப்பவன் நாஸ்திகவாதி என்றும், மதத்துரோகி என்றும் கற்றோருள்ளிட்ட பலராலும் நிந்திக்கப்படுவான்.

சாத்திரத்தின் இயல்பும் உலகத்தின் இயல்பும் இவ்வாறாக, உலகாநுபவம் நிரம்பாத நமது வாலிப ஆசிரியர் உலகம் தொழுதேத்தும் அரிஸ்தாதிலரின்கொள்கையை மறுக்கத் தலைப்பட்ட துணிவை என்னென்றுரைப்போம்! தமக்குக் கல்விபயிற்றுவித்த ஆசிரியரதுகொள்கை பிழையெனத்தெரிந்ததும் அன்னார்மனப்பான்மையைச் சிறிதும் பொருட்படுத்தாது, கலிலவர் தம் புதுக்கொள்கையை வெகு உற்சாகத்தோடும் திண்மையோடும் பிரசுரப்படுத்தினார். பீசா யூனிவர்ஸிடியிலுள்ள ஆசிரியர்களெல்லாரும் திகைத்தார்கள். கலிலவரை நல்வழிப்படுத்துவதாக நினைத்து, தங்களுடைய பழைய கிரந்தங்களின் ஏடுகள் பலவற்றையும்புரட்டிப்புரட்டி அவர்கள் கலிலவருக்குக் காட்டியபின்னரும், அவர் தம் கொள்கையையே உண்மையெனச் சாதித்தார் கலிலவர், "பிரத்தியக்ஷபரிசோதனைதான உண்மை; ஏடுகளின்கூற்றுப் பிழையே" எனச் சாதித்ததுமல்லாமல் அவ்வாசிரியர்களின் பிழைகள் பலவற்றையும் விளக்கிக்காட்டியும் அவர்களை வாய்பேசுதற்கியலாது செய்தார். இதுமட்டும்போதாதென்று பெருந்திரளான ஜனங்களைப் பீசாநகரத்துச் சாய்ந்தகோபுரத்தினருகே அழைத்துச்சென்றார். பட்டணத்து மக்களும் வருவதற்கிசைந்த ஆசிரியர்களும் கீழே கூடிநிற்க, கலிலவர் கோபுரத்தின் உச்சிக்குச்சென்று அங்கிருந்து சிறிதும் பெரிதுமான இரண்டு கற்களைச் சமமாகத்தாங்கி இரண்டையும் ஒரே சமயத்தில் விடுத்தார். இருகற்களும் அவற்றின்பளு வெவ்வேறாக இருந்தபோதிலும் ஒற்றுமையாகவே வீழ்ந்துசென்று ஓரேகாலத்தில் தரையை அடைந்தன. வீழ்ந்ததனாலாய ஒலிகள் இரண்டும் ஒரே ஒலியாக மக்கள்காதிற் றாக்கின.



கூட்டத்திலுள்ளோர் "கலிலவர்க்கே ஜயம்" என ஆரவாரித்தனர். கூட்டத்திலிருந்த ஆசிரியரிற் சிலர் தம்முள் ஒருவரைக்கொண்டு இப்பரிசோதனையை நிகழ்த்தவும் மீண்டும் இருகற்களும் அவ்வாறே வீழ்ந்தன. ஆசிரியர்களெல்லாம் தம் கட்சி தோல்வியுற்றது எனச் சோகமுற்று, வெட்கித் தலைகுனிந்து தம் இருப்பிடங்களுக்குத் தத்தமக்குள் முணுமுணுத்துக்கொண்டே சென்றார்கள். இதனால் பீசா யூனிவர்ஸிடி ஆசிரியர்களெல்லோரும் கலிலவர்க்கு விரோதிகளானார்கள். அவர்கள் தமக்குள்ளே "என்ன ஆச்சரியம்! நம்மிடம் கற்றவித்தையை இந்தப்பயல் நம்மிடமே காட்டுகின்றான்! நம்மோடு சமஅந்தஸ்து வகிக்கவும் இவன் மூளை புரண்டுவிட்டதுபோலும்! இவனது அதிகப்பிரசங்கித்தனந்தான் என்ன! நாமெல்லோரும் மூட்டாள்களாம்! இவனொருவனே புத்திசாலியாம்! நம்மை எவ்வாறு இகழ்ந்தாலும் இகழட்டும். நமது முன்னோர்களையாவது சிறிது மரியாதையுடன் நடத்தலாகாதா? நமது சான்றோர்களைக்காட்டிலும் இவன் மேதாவியாம்! இவனையும் இவன்போன்றோர்களையும் அடக்காதுவிட்டுவைத்தால் சாத்திரமே அழிந்துபோய்விடும்; இவனை எப்படியாவது ஒழித்துவிடவேண்டும்!" என்று பலவாறாகப் பேசிக்கொண்டு கலிலவரது உத்தியோகத்தைத் தொலைக்கவழி பார்த்துவந்தார்கள். அவர்கள் விரும்பிய கேடும் கலிலவருக்குச் சிறிது காலத்திற்குள் விளைவதாயிற்று.

அதன் வரலாறு பின்வருமாறு:—அப்பொழுது டஸ்கனியரசராகிய காஸ்மோ-டி-மெடீச்சியின் காதற்கிழத்திமகனான கயோவன்னி மெடீச்சி என்பான் லெக்குஹாரன என்னும் துறைமுகத்தில் தூர்வையெடுப்பதற்காக ஒரு இயந்திரத்தை அமைத்தான். அவனைச்சார்ந்த பலரும் அவ்வியந்திரத்தை வெகு அற்புதமானதென்று புகழ்ந்தார்கள். உயர்தர ஆசிரியரான கலிலவரும் தன்னைப்புகழ்வாரெனக்கருதிய கயோவன்னி மிக்க தற்புகழ்ச்சிவசனங்களுடன் அவ்வியந்திரத்தை அவரிடம் காட்டவே, அவரும் அதனை ஆராய்ந்துபார்த்தார். பார்த்தபிறகு

அவ்வனது நோக்கத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது, ‘இவ்வியந்திரம் காற்காசும் பெறாது’ என்றும் ‘இதனை உபயோகித்தால் அரசாங்கத்திற்குப் பெரியநஷ்டமே விளையு’மென்றும் உள்ளதை உள்ளவாறு கூறிவிட்டார். இவ்விதமாகக் கலிலவர் யதார்த்தவிஷயத்தை வெளியிட்டதனது அவருக்குக் கேடாகவே முடிந்தது. கலிலவரது எச்சரிக்கையைப் புறக்கணித்து அந்த இயந்திரத்தை உபயோகப்படுத்தினார்கள். அவர் கூறியவாறே நஷ்டம்விளைந்தது. அவமானமடைந்த கியோவன்னி கலிலவரிடம் தீராப் பகைகொண்டான். தன் தந்தையிடத்தும் அரசாங்க அதிகாரிகளிடத்தும் கலிலவரைப்பற்றிப் பலவாறான அவதூறுகளைத் தானாகவும் பிறரைக்கொண்டும் செய்யத்தலைப்பட்டான். பீசா யூனிவர்ஸிடி ஆசிரியர்களும் அவனோடுசேர்ந்துகொண்டார்கள். இக்காரணங்களால், கலிலவர் மூன்றுவருட ஒப்பந்தத்தின்பேரில் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டாரேனும், அவருக்கு இரண்டுவருடத்துக்குமேல் பீசா யூனிவர்ஸிடியிற் காலந்தள்ளமுடியாதுபோயிற்று. இத்துன்பங்களுக்கிடையே, கலிலவனார்குடும்பத்தில் ஒருவிபத்தும் நேர்ந்தது. 1591-வது வருடம் ஜூலைமீ 2௳ அன்று கலிலவரின் தந்தையார் காலகதியடைந்தார். குடும்ப நிருவாகம் கலிலவரைச்சார்ந்தது. தந்தையை இழந்த சிலமாதங்களுக்கெல்லாம் கலிலவர் தம் உத்தியோகத்திலிருந்து நீங்கிக்கொள்ளவேண்டியதாயிற்று.

[தொடரும்]

---

தமிழகராதியின் ஆதாரநூற்றொகுதி—௨.

47

திருச்செந்தூர்

அருமருந்தைய தேசிகர்

இயற்றிய

# அரும்பொருள் விளக்க நிகண்டு.

சென்னைச் சர்வகலாசாலைத்
தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்
S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L.,
பரிசோதித்தது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௫௪.

மதுரைத்
தமிழ்ச்சங்க முத்திராசாலை,
1931

உ

# உள்ளுறை


| | | | | பக்க எண். |
|---|---|---|---|---|
| I | முன்னுரை | | | 1 - 32 |
| II | அரும்பொருள்விளக்கநிகண்டு | | | ௧ - ௧௧௭ |
| | 1. பாயிரம் | ... | ... | ௧ - ௨ |
| | 2. ககரவெதுகை | ... | ... | ௩ - ௧௦ |
| | 3. ஙகரவெதுகை | ... | ... | ௧௧ - ௧௩ |
| | 4. சகரவெதுகை | .... | ... | ௧௪ - ௧௮ |
| | 5. ஞகரவெதுகை | ... | ... | ௧௮ - ௨௦ |
| | 6. டகரவெதுகை | ... | ... | ௨௦ - ௩௦ |
| | 7. ணகரவெதுகை | ... | ... | ௩௦ - ௩௮ |
| | 8. தகரவெதுகை | ... | ... | ௩௮ - ௪௭ |
| | 9. நகரவெதுகை | ... | ... | ௪௭ - ௫௦ |
| | 10. பகரவெதுகை | ... | ... | ௫௦ - ௫௩ |
| | 11. மகரவெதுகை | ... | ... | ௫௩ - ௫௮ |
| | 12. யகரவெதுகை | ... | ... | ௫௬ - ௬௩ |
| | 13. ரகரவெதுகை | ... | ... | ௬௪ - ௭௮ |
| | 14. லகரவெதுகை | ... | ... | ௭௬ - ௮௭ |
| | 15. வகரவெதுகை | ... | ... | ௮௮ - ௯௩ |
| | 16. ழகரவெதுகை | ... | ... | ௯௪ - ௯௮ |
| | 17. ளகரவெதுகை | ... | ... | ௯௯ - ௧௦௪ |
| | 18. றகரவெதுகை | ... | ... | ௧௦௪ - ௧௧௧ |
| | 19. னகரவெதுகை | ... | ... | ௧௧௨ - ௧௧௭ |
| III | அநுபந்தம் I | ... | ... | ௧ - ௮ |
| IV | ஷை II | ... | ... | ௧ - ௨௬ |
| V | ஷை III | ... | ... | ௩௰ - ௩௩ |
| VI | பிழைதிருத்தம் | ... | ... | ௩௪ |

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1931-ம் வரு பிப்ரவரிமாத வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1931 பிப்ரவரி | | | 1930 பிப்ரவரி | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) மாதச்சந்தா வகையில் வரவு ... | 300 | ... | ... | | | |
| (2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 687 | 12 | 4 | | | |
| (3) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக்கட்டணத்தொகை வரவு | 12 | ... | ... | | | |
| (4) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகை வரவு ... | 28 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 1027 | 12 | 4 | 2757 | 12 | 9 |

| விவரம். | செலவு 1931 பிப்ரவரி | | | 1930 பிப்ரவரி | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 131 | ... | ... | | | |
| (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 | ... | ... | | | |
| (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது ... | 54 | 3 | ... | | | |
| (4) Stationery contingencies வகையிற்செலவு ... | 4 | 3 | 6 | | | |

51

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (2) 'செந்தமிழ்' பத்திரிகைக்குச் சந்தாவகையில்வரவு ... | 8 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 123 | 8 | 6 | | | |
| மொத்தம் ரூ ... | 131 | 8 | 6 | 93 | 2 | 6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) தபால், தந்திவகையிற் செலவு | 7 | ... | ... | | | |
| (6) முனிசிபாலிடிக்கு வரி செலுத்திய வகையிற் செலவு ... | 53 | 1 | 7 | | | |
| (7) சங்கமாடீக சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு... | 6 | ... | ... | | | |
| (8) சங்கப்பரீக்ஷகள் சம்பந்தமாகச் செலவு ... | 74 | 3 | 3 | | | |
| மொத்தம் ரூ ... | 456 | 11 | 4 | 578 | 11 | 6 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 35 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டிஞ்ஜன்ஸி வகையிற் செலவானது. ... | ... | 8 | 6 | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ... | 46 | ... | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சுக்கூலி வகையில் வரவு ... | 98 | 14 | ... | | | |
| (2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்கு கிரயம் வரவு ... | 4 | 10 | ... | | | |
| (3) பைண்டிங்கூலி வகையில் வரவு ... | 17 | 1 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 120 | 9 | ... | 182 | 11 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) தபால், தந்திவகையிற் செலவானது. ... | 9 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 90 | 8 | 6 | 160 | 13 | 6 |
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 125 | 14 | 10 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 36 | 13 | 3 | | | |
| (3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது | 28 | 10 | 3 | | | |
| (4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு | 4 | 7 | 3 | | | |
| (5) மெஷின் ரிப்பேர் சம்பந்தமாகச் செலவானது ... | 2 | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 198 | 5 | 7 | 252 | 11 | 4 |

| விவரம் | 1931 | | | 1930 | | | விவரம் | 1931 | | | 1930 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 1279 | 13 | 10 | 3033 | 10 | 3 | ஆக மொத்தம் செலவு ரூ ... | 745 | 9 | 5 | 992 | 4 | 4 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ... | 8772 | 15 | 9 | 5449 | 12 | 6 | மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ... | *9307 | 4 | 2 | 7491 | 2 | 5 |
| ஆகமொத்தம் ரூ ... | 10052 | 13 | 7 | 8483 | 6 | 9 | ஆகமொத்தம் ரூ ... | 10052 | 13 | 7 | 8483 | 6 | 9 |

*By M. U. C. C. S.
Pass Book Rs. 5000- 0- 0
M. R. C. C. Bank
Pass Book Rs. 3294-12- 0
Cash on hand Rs. 1012- 8- 2

9307- 4- 2

*Audited and found correct,*
V. S. RAMASWAMI,
AUDITOR,
24—4—31.

LAKSHMINARAYANAN,
*Manager,*
MADURA TAMIL SANGAM.
5—3—1931.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து
## 1931-ம் வருடம் மார்ச்சுமாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1931 மார்ச்சு | | | வரவு 1930 மார்ச்சு | | | விவரம் | செலவு 1931 மார்ச்சு | | | செலவு 1930 மார்ச்சு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | | I GENERAL SECTION : | | | | | | |
| (1) நன்கொடைவகையில் வரவு. | 1000 | ... | ... | | | | (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 131 | ... | ... | | | |
| (2) மாதச்சந்தாவகையில் வரவு... | 250 | ... | ... | | | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 | ... | ... | | | |
| (3) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 98 | 1 | ... | | | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ... | 123 | 1 | 3 | | | |
| (4) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகைவரவு ... | 28 | ... | ... | | | | (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 2 | 1 | 2 | | | |
| (5) Miscellaneous-வரவு ... | 2 | 6 | 6 | | | | (5) சங்கம்லைப்ரேரிக்கு புத்தகம் வாங்கிய வகையில் செலவானது. ... | 1 | 6 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 1378 | 7 | 6 | 72 | 4 | ... | (6) தபால், தந்திவகையிற்செலவு | 9 | 8 | ... | | | |

## II Editorial Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு ... | 6 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 55 | 12 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 61 | 12 | ... | 252 | 11 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு. | 68 | 4 | ... | | | |
| (8) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு. ... | 49 | 4 | 3 | | | |
| மொத்தம் ரூ | 511 | 8 | 8 | 489 | 1 | 7 |

## II Editorial Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 27 | 8 | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாகக் காகிதம் வாங்கிய வகையிலும், கண்டிஜன்ஸி வகையிலும் செலவு. ... | ... | 2 | ... | | | |
| (3) ஷை புத்தகங்கள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு. ... | 59 | 4 | ... | | | |
| (4) தபால்,தந்திவகையிற்செலவு | 9 | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 96 | 6 | ... | 120 | ... | ... |

## III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு. | 150 | ... | ... | | | |
| (2) ஷை அச்சு வேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரையம் வரவு ... | 19 | 2 | ... | | | |
| (3) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 17 | 13 | ... | | | |
| (4) Miscellaneous—வரவு ... | 1 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 187 | 15 | ... | 306 | 12 | 9 |

## III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 118 | ... | 4 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு. | 14 | 13 | 3 | | | |
| (3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது .. | 28 | 9 | 5 | | | |
| (4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 1 | 5 | 6 | | | |
| (5) மெஷின்வகையரா ரிப்பேர் வகையிற் செலவு. ... | 2 | 8 | ... | | | |
| (6) முனிசிபாலிடிக்கு பிரஸ் தொழில்வரி செல்லாக்கியது. | 18 | ... | ... | | | |
| மொத்தம் ரூ. ... | 183 | 4 | 6 | 236 | 11 | 8 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 1628 | 2 | 6 | 631 | 11 | 9 | ஆக மொத்தம் செலவு ரூ. | 791 | 3 | 2 | 845 | 13 | |
| மாத ஆரம்பத்திலிருந்த கை யிருப்புத்தொகை ரூ. ... | 9307 | 4 | 2 | 7491 | 2 | 5 | மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ரூ. ... | *10144 | 3 | 6 | 7277 | ... | 1 |
| ஆகமொத்தம் ரூ. ... | 10935 | 6 | 8 | 8122 | 14 | 2 | ஆக மொத்தம் ரூ. ... | 10935 | 6 | 8 | 8122 | 14 | |
| | | | | | | | *By M. U. C. C. S. Pass Bk. Rs. 5000- 0- 0<br>M.R.C.C. Bank Pass Bk. Rs. 4544-12- 0<br>Cash on hand Rs. 599- 7- 6<br>10144- 3- 6 | | | | | | |

*Audited and found correct.*

**V. S. RAMASWAMI,**
AUDITOR.
24—4—1931.

**LAKSHMINARAYANAN,**
*Manager,*
MADURA TAMIL SANGAM.
4—4—1931.



## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை) ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச்சினார்க்கினியருரை உரையாசிரியருரையுடன்) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

### செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கணநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதிச்செய்யுட்கள் ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11.* | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | சரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21.* | சிதம்பரப்பாட்டியல் உரையுடன்) ... ... | | | |
| 22. | ...ருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23 | ...க்கிரமசோ...னுலா ... ... ... | | | |
| 24. | ...குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திரநூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... ... | 1 | 4 | 0 |

## வேறுபதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வஞ்சிமாநகர் ... ... ... | 0 | 8 | 0 |
| 2. | ஜோதிமாலை (தமிழ்நாவல்) ... ... | 0 | 4 | 0 |
| 3. | சிவஞானசுவாமிகள்மீது இரட்டைமணிமாலை ... | 0 | 1 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:—1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 28 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் [illegible]ற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 1[illegible] [illegible]ம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.